தமிழும் சிங்களமும் தெரிந்தவர்களை நியமிக்க

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தந்திப்பெட்டி எண். 49 மலர் 10

போன் 389 இதழ் 28

National Tamil Daily தேசிய தினசரி

[illegible] மாசி 26 ஜுல்ஹஜ் 9 சனிக்கிழமை (9-3-68)

## நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க அலுவலகங்கள், வங்கிகள், கூட்டுத் தாபனங்கள் ஆகியவைகளில் உத்தியோக மொழிச் சட்டத்துக்கு பாதகம் ஏற்படாதவகையில் முழு அளவில் தமிழ் அலுவல் இயன்றவரை செய்யப்பட்டு வருகின்றன. தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளில் தேர்ச்சியும் பெற்றவர்களை இப்பகுதிகளில் வேலைக்கமர்த்த முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு உதவிநிதி மந்திரி திரு என். விமலசேன இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் கிளிநொச்சி எம்.பி திரு. க. பொ. இரத்தினம் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க அலுவலகங்கள் வங்கிகள், கூட்டுத் தாபனங்கள் ஆகியவைகளில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சியுள்ளவர்களை வேலைக்கமர்த்து வதற்குப் பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்கப் படுகிறதென்றும் உதவி மந்திரி சொன்னர்.



# "கச்சதீவு இலங்கைக்கே சொந்தம்

# சரித்திர வரலாற்று சான்றுகள் உண்டு"

## பிரதமர் அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது எனவும் இலங்கையின் கட்டுப்பாட்டின்கீழ் கச்சதீவு இருந்துவருவதாகவும் இதற்கு நீண்டகால சரித்திரவரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன எனவும் இது சம்பந்தமான பிரச்னை நாகரிகமானமுறையில் பரஸ்பர நல்லுணர்வுடன் தீர்த்துக்கொள்ளப்படவேண்டுமெனவும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இன்று பார்லிமெண்டில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

பிரதமர் இது சம்பந்தமான தமது அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் ஏற்படும் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு வருடா வருடம் ஒரு வருடம் இலங்கையிலும் மற்றவருடம் இந்தியாவிலுமாக உயர்தர அதிகாரிகள் மகாநாடு நடைபெற்று வருவது வழக்கமாக இருந்துவருகிறது. இப்பிரச்னையையும் சுமுகமாக இம் மாகாநாட்டின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம்.

### குற்றச்சாட்டுக்கு பதில்

இந்தியா தனது பிரதேச விஸ்தரிப்புக்கொள்கையை கச்சதீவிலும் கடைப்பிடிக்கிறது என்றும் இலங்கையில் காலூன்ற கச்சதீவைப்பிடிக்க முயலுவதாகவும் இன்று ஜனப பிரதிநிதிகள் சபையில் ரெனிடீமெல் குற்றஞ்சாட்டியபோது பிரதமர் குறுக்கிட்டு கச்சதீவு மனித சஞ்சாரமற்ற ஒரு பிரதேசமென்ஞர். அவர்கூறியதற்கு ஆதாரமேதுமில்லையெனவும எடுத்துக்கூறினர்.

வல்வை இளைஞன் கொலை வழக்கு:

## 'பத்திராஜவுக்கு துப்பாக்கிக் குண்டுபட்ட காயங்களிருந்தன'

### இன்ஸ்பெக்டர் மூர்த்தி சாட்சியம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

''நான் சம்பவதினம்மாலை 9-15 மணியளவில் உதவிப் பொலிஸ் சுப்ரிண்டண்ட் திரு. விபனகேயின் உத்தரவின் பேரில் வல்வெட்டித்துறையில் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்றேன். அந்நேரத்தில் சந்திக்கும் பிரேதம் இருந்த இடத்திற்கும் இடையில் ஆர். வி. ஜி. அடையாளம் பொறிக்கப்பட்ட வான் நிறுத்தப்பட்டிருந்ததையும் கண்டேன்.''

என்று காங்கேசன்துறை தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின்போது மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆர். சிவஞானசுந்தரம் என்ற இளைஞனை 'பொலிஸ் 303' துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ததாகவும் அதற்கு உடந்தையாக இருந்ததாகவும் வல்வெட்டித்துறை முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பத்திராஜமீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

திரு. மூர்த்தி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

நான் சம்பவதினம் ஸ்தலத்தில் வைத்து பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம்,

(8-ம் பக்கம் பார்க்க)

## உப சபாநாயகராக திரு. சிவசிதம்பரம் தெரிவு

## சபைக்கு வரவில்லை ஆனாலும் அவருக்கு போட்டியிருக்கவில்லை

கொழும்பு, வெள்ளி

ஜனப்பிரதிநிதிகள் சபையின் உபசபாநாயகராக உடுப்பிட்டி எம். பி. யும், தமிழ்க் காங்கிரஸ் செயலாளருமான திரு. மு. சிவசிதம்பரம் இன்று ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஜனப்பிரதிநிதிகள் சபை இன்று பிற்பகல் சபாநாயகர் திரு. ஷேர்லி கொரியா தலைமையில் கூடியபொழுது உபசபாநாயகர் தெரிவு நடைபெற்றது.

திரு. சிவசிதம்பரத்தின் பெயரை சபை முதல்வர் திரு. சி. பி. டி. சில்வா பிரேரித்தார். எதிர்க்கட்சி பிரதமகொறடா திரு எம்.பி.டி. சற். சிறிவர்த்தன அனுவதித்தார். வேறு பெயர்கள் பிரேரிக்கப்படாததால் திரு. சிவசிதம்பரம் உபசபாநாயக



ராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதாக சபாநாயகர் அறிவித்தார்.

திரு. சிவசிதம்பரம் சுகவீனமுற்றிருப்பதால் அவர் இன்று சபைக்கு வரவில்லை.

பிரதிநிதிகள்சபைக் குழுக்களின் தலைவராக ஜா-எலை எம்.பி.யான திரு. பரிஸ் பெரேரா தெரிவு செய்யப் பட்டார்.

புதிய நியமன எம். பி. யாக [illegible] ஜனப் இஸ்தின் முகம்து [illegible]

## ராணி கொலை வழக்கு: எதிரி லீலாவதி விடுதலை

கொழும்பு, வெள்ளி

ராணி கொலைவழக்கில் கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டிருந்த 5 பிள்ளைகளின் தாயாரான திருமதி லீலாவதி அமரசிங்கா இன்று விடுதலை செய்யப்பட்டார். அட்டர்னி ஜெனரலின் பரிசீலனைக்குப் பின் அவர் உத்தரவைத் தொடர்ந்து நீர்கொழும்பு மாஜிஸ்திரேட்

[8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். பிரதேச கலா மன்ற இலக்கியக்குழு

யாழ்ப்பாணம், சனி

யாழ் பிரதேச கலாமன்றத்தின் இலக்கியத்துக்கான குழுவொன்றை அதன் தலைவரான திரு. து. உருத்திரமூர்த்தி (மஹாகவி) நேற்று தெரிவு செய்தார். தெரிவுசெய்யப்பட்ட குழுவை பிரதேச கலாமன்றத் தலைவரும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருமான திரு வேணன் அபயசேகரா நேற்று அங்கீகரித்தார்.

தலைவர் திரு. து. உருத்திரமூர்த்தி (மஹாகவி) செயலாளர்: திரு. எஸ். சபாரத்தினம் (சசிபாரதி), உறுப்பினர்களாக கவிஞர் இ. அம்பிகைபாகன் (அம்பி), கவிஞர் வி. கந்தவனம். திரு. இ. மகாதேவா (தேவன் யாழ்ப்பாணம்), திரு ஏ. ஜே. கனகரத்தின, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர். கே. வீரகத்தி, திரு. இ. ச. வரதராஜன் (வரதர்) ஆகியோர் தெரியப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## விளம்பரம்

செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளவும் மேலதிகமான பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் உத்தரவாதமும்பாதுகாப்புமளிக்கும் ஒரே ஸ்தாபனம் த பினுன்ஸ் அன்ட் கரண்டி கொம்பனி லிமிட்டட், 371, டாம் வீதி, கொழும்பு-12.

இன்றே சேருங்கள்

விபரங்கட்கு:

ப. தேவசேனுபதி,
வடமாகாண மனேஜர்,
குமாரவில்லா,
மூளாய்,
477 சுழிபுரம்.

### அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 276 காங்கேசன்துறைவீதி, திரு.வை. துரையப்பா அவர்களிடம் 1-1-67க்கு முன் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவை 23-3-68சனிக்கிழமை பகல் 10 மணி தொடக்கம் அதே இடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
468 ஏல விற்பனவாளர்

### அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 222, காங்கேசன்துறை வீதி, திரு- கந்தையா பரமு அவர்களிடம் 1-1-66 தொடக்கம் 1-9-66 முன் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவை 25-3-68 திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் அதே யிடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்.
472 வண்ணார்பண்ணை.

### அடைவுநகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 236 நம்பர் கடையில், நகை அடைவுபிடிப்பவர் ப. க. பரமநாதன் அவர்களிடம் 5-1-65 தொடக்கம் 31-12-66 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 20-3-68 புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி அடைவுகடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். 474

### ஏலவிற்பனை

யாழ்ப்பாணக் கச்சேரி எவ் 503- யாழ்ப்பாணம் பழைய கச்சேரி எல்லைக்குள் நிற்கும் ஒரு மலைவேம்பும், அரசாங்க செயலக எல்லைக்குள் நிற்கும் ஒரு மலைவேம்பும் 23-3-68 காலை 10-30 மணிக்கு பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். முழு விபரங்களுக்கும் 8-3-68ல் வெளியான அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.
G. P. 1895


## குளத்தினுள் சைக்கிள்

அனலைதீவு, வெள்ளி

2 வாரகாலமாக தேடப்பட்டுவந்த களவாடப்பட்ட சைக்கிள் ஒன்று அனலைதீவு புளியடிக்குளத்தினுள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. மரமேறும் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் மரத்தடியில் வைக்கப்பட்டிருந்த சைக்கிளை யாரோ தூக்கிச்சென்று விட்டார்களாம். உடனமே களவாடப்பட்ட நிலையில் சைக்கிளைக் குளத்தினுள் எறிந்துள்ளதாகக் கூறப்படுகிறது. குளிக்கச்சென்றவர்கள் தற்செயலாகக் கண்டார்களாம்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி [கொழும்பு] | பிளாஸா [வெள்ளவத்தை] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்] |
| விஜயா [மட்டுநகர்] | ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] | விஜிதா [ஹட்டன்] |



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென் கலர்)


## கேள்வி விளம்பரம்

### மல்லாகம் கிராமசபை

மல்லாகம் வங்களா ஒழுங்கை வேலைக்கான கேள்விப்பத்திரம் எம்மால் 19-3-68 மாலை 3 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். 18-3-68 மாலை 3 மணிவரை ரூபா 50/- பிணைப்பணமும் ரூபா 5/- பத்திரப்பணமும் கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கொண்டு விபரங்கள் கிராமசபைக் காரியாலயத்திலும், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி அதிபர் காரியாலயத்திலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

[ஒப்பம்]
வை. இராசதுங்கம்,
அக்கிராசனர்.
கி. ச. மல்லாகம்.
கிராமசபை காரியாலயம்,
மல்லாகம்,
7-3-68 484

## கேள்விப் பத்திர விளம்பரம்

### மல்லாகம் கிராமசபை

அளவெட்டி வாரியாமூலை செட்டிச் சோலை ஒழுங்கைக்கான கேள்விப்பத்திரம் எம்மால் 19-3-68 மாலை 3 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். 18-3-68 மாலை 3 மணிவரை ரூபா 50/- பிணைப்பணமும் ரூபா 5/- பத்திரப் பணமும் கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கொண்டு விபரங்கள் கிராமசபைக் காரியாலயத்திலும் உள்ளூராட்சி அதிபர் (யாழ்ப்பாணம்) காரியாலயத்திலும் அறிந்து கொள்ளலாம்.

(ஒப்பம்)
வை. இராசதுங்கம்,
அக்கிராசனர்,
கி. ச. மல்லாகம்.
கிராமசபை காரியாலயம்,
மல்லாகம்,
7-3-68. 485

## அதிகாரிகள் சந்திப்பு

புதுடில்லி, மார்ச் 8

'கட்ச்' தீர்ப்பை அமுல் நடத்துவது பற்றி இன்று இந்தியா- பாகிஸ்தான் அதிகாரிகள் நேற்று பேச்சு வார்த்தைகள் ஆரம்பித்தார்கள். பேச்சு வார்த்தைகள் சில தினங்கள் நடைபெறும்.


REGAL JAFFNA
Daily at
4-40, -700, & 9-45 p.m.
Bob Hope &
Frankie Avalon
in
I'll Take Sweden
[in Technicolor]

4-வது வாரம்
நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
தினசரி 2-30 க்கு மெற்னி
எஸ். எஸ். ஆர். - தேவிகா
நடித்த
மறக்க முடியுமா?

MANOHARA
JAFFNA
Daily at 4-45,7-00, 9-45p.m
Chrisopher Lee
in
DRACULA
Prince of Darkness

76வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில்காட்சி
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
நடித்த
[illegible]


## மாவட்டசபை இப்போது வேண்டாம்

### பிரதமருக்கு தந்தி

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் நடைபெற்றுவரும் கலவரங்கள் முற்றாக ஒழியும்வரை மாவட்ட சபை மசோதாவைப்பார்லிமெண்டில்சமர்ப்பிக்கவேண்டாம்.''

இவ்வாறு சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினர் நேற்று பிரதமரை தந்திமூலம் வேண்டியுள்ளனர்.

இங்கு நடைபெற்ற சிறுபான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணியின் அதிகார சபைக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்வரும் தீர்மானங்களும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

சமீபத்தில் உயர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட செல்வச்சந்நிதி ஆலயப்பிரவேச அப்பீல் வழக்கில் தமிழர் மத்தியில் நிலவும் வேற்றுமையை ஒழிக்கும் நோக்கமாகவும் அவர்களை ஒற்றுமைப்படுத்தும் நோக்கமாகவும் ஆஜராகி வெற்றியீட்டித்தந்த வழக்கறிஞர்களுக்கு நன்றி தெரிவித்தல்.

சாதிக்கலவரங்களை நிறுத்திச் சாதிப்பாகுபாட்டை ஒழிக்கவென தெல்லிலங்கையிலிருந்து இங்கு வந்த பௌத்த குருமார்களுக்கும் நன்றிதெரிவிப்பதுடன் தொடர்ந்து அவர்கள் இங்கு விஜயம் செய்கையில் போதிய வரவேற்பளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. [கா. நி]

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இனப் பசுக்களும் கன்றுகளும் விற்பனைக்கு உண்டு. தி. முருகேசு, K. K. S. வீதி, தெல்லிப்பளை. 1780

### கல்வி

வகுப்புகள்

ஆங்கிலம்/தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தகம், வர்த்தக கணக்கு வகுப்புகள் நடத்தப்படும். பெண்களுக்கு தனி வகுப்புகள். யூனைடெட் இன்ஸ்ரிட்டியூட்ஸ், நெலவியடி, கரவெட்டி. 1778

# கைப்பற்றிய கார்கள் கடத்தலில் ஈடுபட்டனவா?

குரும்பசிட்டி, வெள்ளி

காங்கேசன்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸ் கோஷ்டியினரைக் கண்டு, கள்ளக் கடத்தல் வேலையிலீடுபட்டுக்கொண்டிருந்ததாக சந்தேகிக்கப்படும் கடத்தல்காரர் தப்பித்துத் தலைமறைவாகிவிட்டனராம்.

இச்சம்பவம் மயிலிட்டிக் கடற்கரையோரத்தில் நடைபெற்றது.

சார்ஜண்ட் ஏ. கிருஷ்ணராசா தலைமையில் சென்றிருந்த பொலிஸ் கோஷ்டி கடத்தல் பொருட்களை எதனையும் கைப்பற்றிக்கொள்ள முடியாதுபோய்விட்டதாம். பொருட்களுடன் கடத்தல்காரர் தலைமறைவாகிவிட்ட போதிலும், அநாதரவான நிலையில் ஒழுங்கையில் விடப்பட்டிருந்த இரண்டு கார்களைக் கைப்பற்றி பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

இதுவரை கார்களை, உரிமையாளர் எவரும் கோரவில்லையெனத் தெரிகிறது. கள்ளக் கடத்தல் வேலைக்கு இக்கார்கள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கலாமெனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர். இச்சம்பவம் குறித்து காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.

## மலேரியா பரவலாம்

உடுவில், வெள்ளி

சுன்னாகம் சந்தையிலும் அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் நுளம்பின்தொல்லை அதிகரித்து வருகின்றதால் இப்பகுதிகளுக்கும் மலேரியா ஜுரம் பரவக்கூடும் என பொதுமக்கள் அஞ்சுகின்றனர். மேற்படி இடங்களை சுத்தமாக்கவும் அவே நேரத்தில் நுளம்புகளை ஒழிப்பதிலும் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் வேண்டப்பட்டுள்ளார்கள்.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், வெள்ளி

தேசிய ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. எஸ். பி. நடராசா, உபதலைவர்கள் திருவாளர்கள் சி. குணபாலசிங்கம், வி. கார்த்திகேசு, எஸ். விக்கிரமநாயக்க, பொருளாளர் திரு. எஸ். இராசநாயகம். நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.


"யாழ்ப்பாணக் கிளை"
டபிள்யூ. எஸ். பெருண்டோ அன் சன்,
(நீர்கொழும்பு)

திருமணச் சடங்குகள், மரணச் சடங்குகள் சம்பந்தமான சகல ஒழுங்குகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். புத்தம் புதிய பூக்கள், பூச்செண்டுகள் மலர் வளையங்கள் எம்மிடம் கிடைக்கும். பல ரகப் பிரேதப் பெட்டிகள் எம்மிடம் உண்டு. பிரேதம் கெடாதபடி பாதுகாத்துவைப்பதில் நவீன முறைகள் கையாளப்படும். பிரேதம் கொண்டு செல்லும் நவீன வண்டிகள் உண்டு. ஞாபகச் சின்னங்கள் சிறந்த வகையில் அமைத்துக் கொடுக்கப்படும்.

இரவு பகல் எந்நேரமும் சேவை அளிக்கப்படும்.

சலார் சகாயம்.

84, பாங்ஷால் வீதி, சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொடீஷியாவில் மேலும் பல ஆபிரிக்கருக்கு மரண தண்டனை

சாலிஸ்பரி, மார்ச். 8

ரொடீஷிய அரசாங்கம் 3 ஆபிரிக்க விடுதலை வீரரைத் தூக்கிலிட்ட சம்பவத்துக்கு உலகெங்கும் பலத்த கண்டனம் தெரிவிக்கப்படும் அதே நேரத்தில் ரொடீஷியாவில் ஆட்சி செலுத்தும் சட்ட விரோத சிமித் ஆட்சியாளர் மேலும் பல ஆபிரிக்கர்களைத் தூக்கிலிடத் திட்டமிட்டுள்ளனர்

ரொடீஷியவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்கரின் தொகை இப்போது 114 ஆக உயர்ந்துள்ளது. மற்றும் பலருக்கு ஆயுட்காலத் தண்டனையும், விதிக்கப்பட்டுள்ளது. ஒரு 15 வயது ஆபிரிக்கச் சிறுவனுக்கு ரொடீஷிய உயர்நீதிமன்றம் 20 வருடம் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சில ஆபிரிக்கர்களை ரொடீஷிய அரசாங்கம் இன்று தூக்கிலிடுமென கூறப்படுகிறது

### பிரிட்டிஷ் அரசே பொறுப்பாளி

இதற்கிடையில், அடிஸ் அபாபாவிலிருந்து ஆபிரிக்க நாடுகள் ஒற்றுமை இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், ரொடீஷியப் பிரதமர் திரு. அயன் சிமித்தை பிரிட்டிஷ் அரசாங்கம் கொலைக்குற்றத்துக்காக கைதுசெய்யவேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

ரொடீஷிய அரசாங்கம் எடுத்துவரும் கொடுமையான நடவடிக்கைகளுக்கெல்லாம் பிரிட்டிஷ் அரசாங்கமே முழுப்பொறுப்பாயாகும் என்றும் ஆபிரிக்க நாடுகள் ஒற்றுமை இயக்கம்தெரிவித்துள்ளது ரொடீஷியாவிலுள்ளசட்டவிரோத சிமித் அரசாங்கத்துக்கெதிராக வன்முறைநடவடிக்கை எதையும் தாம்எடுக்கப்போவதில்லை என்று பிரிட்டிஷ் அரசாங்கம் வலியுறுத்தி வந்ததனாலேயே, ரொடீஷிய அரசாங்கம் இவ்வளவு துணிச்சலுடன் காரியங்களை நடத்திவருவதாக அந்த இயக்கம் கூறியுள்ளது.

### கொங்கோவில் கண்டனம்

கின்ஷாஷாவில், கொங்கோ அரசாங்கம், ரொடீஷியா 3 ஆபிரிக்கர்களைத் தூக்கிலிட்டதை யொட்டி வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது. 'மிருகத்தனமான செயல்' என அது, ரொடீஷியாவின் நடவடிக்கையை வர்ணித்துள்ளது.

## பிரிட்டிஷ் மந்திரி சபை 3 மணி நேரம் ஆலோசனை

லண்டனில், ரொடிஷிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளையிட்டு பிரிட்டிஷ் மந்திரி சபை நேற்றுக்கூடி 3 மணி நேரமாக விவாதித்தது. ரொடீஷிய பிரச்னையினால் ஏற்பட்டுள்ள சட்ட, அரசியற் சாஸன ரீதியான சிக்கல்களை ஆராய்வதற்கென மந்திரி சபைக் கூட்டத்துக்கு அட்டோர்னி ஜெனரலும் அழைக்கப்பட்டிருந்தார்.

ரொடீஷியப் பிரதமர் திரு. அயன் சிமித்துக்கும் அவருடைய சகாக்களுக்கும் எதிராகக் கொலைக்குற்றம் சுமத்துவது பற்றி பிரிட்டிஷ் அரசாங்கம் ஆலோசித்து வருவதாக லண்டன் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சன் நேற்றுப் பேசுகையில் சாம்ராஜ்ய நாடுகளின் பிரதமர்களுக்கு ரொடீஷிய விவகாரம் பற்றிய தகவல்கள் அவ்வப்போது அறிவிக்கப்பட்டுவருவதாகக் கூறினார். ஆனால், இப்போது இப்பிரச்னையையொட்டி ஒரு சாம்ராஜ்ய பிரதமர்கள் மாநாடு கூட்டுவதற்கான அவசியமில்லை என்றும் பிரதமர் கூறினார்.

ரொடீஷியாவில் மரண தண்டனைவிதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்கர்களின் கதி பற்றி பிரிட்டிஷ் பிரதமர் தமது ஆழ்ந்தகவலையைத்தெரிவித்தார்.

பிரிட்டிஷ்

## வரவு-செலவு திட்டம்

லண்டன் மார்ச். 8

இம்மாதம் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பிரிட்டனின் வருடாந்த வரவு-செலவுத் திட்டம் மிகவும் கடுமையானதாகவிருக்குமென பிரிட்டிஷ் வர்த்தக மந்திரி திரு அந்தோனி குறஸ்லாண்ட் நேற்று இங்கு எச்சரித்தார்.

ஏற்றுமதிகளுக்கு அதிக மூலதனங்களைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் சாதாரண மனிதனின் செலவுகளின் மீது தடைகள்போடப்படுமென்று அண்மையில் பிரிட்டிஷ் நிதிமந்திரி திரு. ரோய் ஜெங்கின்ஸ் அறிவித்ததைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கையும் வந்துள்ளது

## யுத்த வீரர் சமாதிகளைப் பார்க்க அனுமதி இல்லை

மாஸ்கோ, மார்ச் 8

வடசீனத்தில் சோவியத் போர் வீரர்கள் புதைக்கப்பட்ட இடங்களை பீகிங்கிலுள்ள சோவியத் ராஜதந்திரிகள் பார்க்கலாகாது என்று செஞ்சீனம் தடைவிதித்திருப்பது சிநேக பூர்வமான செயலல்ல என்று சோவியத் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

இரண்டாவது உலக யுத்தத்தில் ஜப்பானியரை எதிர்த்துப் போர் புரிந்து மாண்ட சோவியத் வீரர்களின் சமாதிகள் வட சீன நகரங்கள் பலவற்றிலுண்டு. இவற்றைப் போய்ப் பார்ப்பதற்கு பீகிங்கிலுள்ள சோவியத்தூதரகம் விடுத்த வேண்டுகோளை பீகிங் நிராகரித்துவிட்டது.

## ஷேக் அப்துல்லாவின் புதிய கட்சி

புதுடில்லி, மார்ச் 8

அகில இந்திய முஸ்லிம் கட்சியொன்றை ஏற்படுத்தும் வேலையில் ஷேக் அப்துல்லா தீவிர ஆலோசனை செய்வதாகத் தெரியவருகிறது.

சமீபத்தில் அவர் முஸ்லிம் லீக் எம். பிக்களை புதுடில்லியில் சந்தித்தபோது இந்த யோசனை எழுந்ததாகத் தெரிகிறது.

கேரள முஸ்லிம் லீக்கை விஸ்தரித்து அதை ஓர் அகில இந்திய கட்சியாக்கி ஷேக் அப்துல்லாவே அதன் தலைவராயிருக்க வேண்டுமென்றும் இன்னொரு யோசனை கூறப்பட்டது.

## கங்கைநீர்குடித்து 6 பேர் மரணம்

புதுடில்லி, மார்ச் 8

புனித கங்கை ஆற்று நீரைக் குடித்த 6 பேர் மரணமாகினர். கங்கை ஆற்று நீரில் ஏதோ ஒரு வகை எண்ணெய்ப் பற்று கலந்து இருக்கக் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இறந்தவர்களை விட மற் ... அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சீனத்தூதரகத்தில்

## தடுத்து வைக்கப்பட்ட இரு இந்திய பொலீஸ்காரர்

### இந்தியா ஆட்சேபம்

புதுடில்லி, மார்ச் 8

நேற்று முன்தினம், இந்திய ரிசேவ் பொலிஸைச் சேர்ந்த இருபொலிஸ் உத்தியோகத்தர்கள், புதுடில்லியிலுள்ள சீனத் தூதரகத்தில் தடுத்து நிறுத்தப்பட்டு, அங்கிருந்த அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றி நேற்று இந்திய லோக சபையில் விவாதிக்கப்பட்டது. இது பற்றிச் சீனத்தூதரகத்திடம் இந்திய அரசாங்கம் முறையிட்டுள்ளதாகச் சபையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரண்டு இந்தியப் பொலிஸாரும் தற்செயலாக தூதரக வளவில் பிரவேசித்ததாகவும், திரும்பிச்செல்ல அவர்கள் புறப்பட்டபோது அவர்களை சீனத்தூதரக அதிகாரிகள் அழைத்துச் சென்று சில மணிநேரம் தமது தூதரகத்திலே வைத்துக்கேள்வி கேட்டதாகவும் கூறப்படுகிறது.

இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கடத்திய குற்றச்சாட்டொன்றை புதுடில்லிப் பொலிஸ், சீனத் தூதரகத்துக் கெதிராகத் தாக்கல் செய்துள்ளது.

## நியூசிலாந்துக்கு இந்திய எஃகுபைப்

வெலிங்டன், மார்ச் 8

இந்திய எஃகு நிறுவனமான இந்துஸ்தான் எஃகு தொழிற்சாலையிலிருந்து 750,000 பவுண் பெறுமதியான எஃகு பைப்புகளை நியூசிலாந்து வாங்கவிருக்கிறது. இத்தகவலை இங்கு நேற்று நியூசிலாந்து வர்த்தக மந்திரி வெளியிட்டார்.

சில அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் போட்டியிடும் நியூசிலாந்துக்கு இப்பைப்புகளை விற்கும் ... இந்தியா ... குறிப்பிடத்தக்கது.

## அணு ஆயுத உற்பத்தி செய்யாத நாடுகள் கூட்டுப் பாதுகாப்பளிக்க 3 வல்லரசுகள் தீர்மானம்

நியுயோர்க், மார்ச் 8

அணுஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள அணுஆயுத உற்பத்தி செய்யாத நாடுகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கும் ஓர் இணைப்புத் தீர்மானத்தைஅமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் ஆகிய மூன்று வல்லரசுகளும் ஐ. நா. பந்தோபஸ்து சபையில் சமர்ப்பித்துள்ளன.

அணுஆயுத உற்பத்தி செய்யாத நாடுகளுக்குஇணைந்த பாதுகாப்பு அளிப்பதாக இம்மூன்று வல்லரசுகளும் இத்தீர்மானத்தில் உத்தரவாதமளித்துள்ளன.

அணுஆயுதபரவல் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடச் சீனவும், பிரான்ஸும் மறுத்துள்ளன என்பதுகுறிப்பிடத்தக்கது.

## மலேஷியப் பிரதமரின் இந்தோனேஷிய விஜயம்

### நட்புறவை வளர்த்துள்ளது

ஜகார்த்தா. மார்ச் 8

இந்தோனேஷியாவும் மலேஷியாவும் ஒரு நட்புறவு ஒப்பந்தத்தைச் கைச்சாத்திட முடிவு செய்துள்ளன.

மலேஷியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மானின் இந்தோனேஷியவிஜயத்தின் முடிவில் வெளியிடப்பட்ட இணைப்பறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின்மூலம் இரு நாடுகளுக்குமிடையே உள்ள நெருக்கடியும், தப்பபிப்பிராயங்களும் நீக்கப்படுமெனத் தாம் நம்புவதாக மலேஷியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் இங்கு பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த ஒப்பந்தத்துடன், மலேஷியாவுக் கெதிராகச் சில வருடங்களுக்குமுன் இந்தோனேஷியா கடைப்பிடித்து வந்த எதிர்ப்புக்கொள்கை அறவேஒழிந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஐ. அ. கு. தலைவர்களை ஜாரிங் சந்தித்தார்

கெய்ரோ, மார்ச் 8

மேற்கு ஆசியாவிலுள்ள ஐ. நா. விசேஷ பிரதிநிதி டாக்டர் குணர் ஜாரிங் நேற்று ஐ. அ. கு. தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்.

யூதாண்டை நியூயோர்க்கில் சந்தித்துவிட்டுத் திரும்பிய பின்னர், டாக்டர் ஜாரிங் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது. இதுவே முதற்தடவையாகும்,

## சீனத்துக்குள் செல்லும் நாகர்

புதுடெல்லி, மார்ச் 8

நாகர் சாதியினர் பர்மா மூலம் சீனத்துக்குள் போவது சம்பந்தமாக இந்தியா தனது கவலையைப் பர்மிய அரசாங்கத்துக்கு தெரிவிக்க இருக்கிறது.

ஜெனரல் நேவின் சமீபத்தில புதுடில்லிக்கு வரும்போது இவ்விஷயம் ஆலோசிக்கப்படுமென தெரியவருகிறது. எல்லைப் புறங்களைக் கண்காணிப்பதில் இந்தியா பர்மாவின் உதவியை நாடுமென்று கூறப்படுகிறது.

## ஆண்கள் அலங்காரம்!

மே.பெர்லின், மார்ச்.8

பெண்கள் கண்ணாடிகளின் முன்பு மணிக்கணக்காக நின்று தங்களை அலங்கரித்துக் கொள்கிறார்கள். ஆண்கள் அவ்விதம் தங்களை அலங்கரித்துக்கொள்வதில்லை. "தங்களை அலங்கரித்துக்கொள்ள ஆண்களைத் தூண்டும்" விளம்பரங்கள் ரூசிய ஆதிக்கப்பகுதியிலுள்ள கிழக்கு ஜெர்மனிப் பத்திரிகைகளில் வெளிவருகின்றன.

அரசின்நிறுவனத்திலுள்ள அலங்காரப் பொருள்கள் தொழிற்சாலையின் உற்பத்தி பெருகிவிட்டதால்ஆண்களையும் கவர்ந்திழுக்க ஆட்சியாளர்கள் முயற்சி செய்கிறார்கள்.

## நாகரீகப் பெண்கள் மகிழ்ச்சி

புதுடில்லி, மார்ச் 8

திரு மொரார்ஜி தேசாயின் புதிய வரவு செலவுத் திட்டம் இந்திய நாகரீகப் பெண்களுக்கு மகிழ்ச்சி கொடுத்திருக்கிறது. ஏனென்றால் அழகு அலங்காரப் பொருட்களுக்கு கடுமையான வரிகள் விதிக்கப்படவில்லை.

## வரட்சி வலையமும் ஈரவலையமும்

புதுடில்லி, மார்ச்,8

இந்தியாவில் மது விலக்குள்ள' வரட்சி' ராஜ்யங்கள் எவை, மது விலக்கில்லாத 'ஈர' வலயங்கள் எவை?

சென்னை, குஜராத், மஹாராஷ்டிரம் 'வரட்சி' ராஜ்யங்கள். பிஹார், ஜம்மு-காஷ்மீர், உத்தர பிரதேசம், மேற்கு வங்காளம், ராஜஸ்தான், பஞ்சாப் ஆகியவை 'ஈர' வலயங்கள்.

ஆந்திரம், அஸ்லாம், கேரளம், மத்திய பிரதேசம், மைசூர், ஹரியானா ஆகிய ராஜ்யங்களில் சில பகுதிகளில் மட்டும் மது விலக்கு நிலவுகிறது.

## 'கச்' பகுதியில் பாகிஸ்தானிகள் நுழைவு

அமதபாத். மார்ச். 8

கச்கடற் கரை யோரமாக அத்துமீறி நுழைந்த சுமார் 500 பாகிஸ்தானியரை பொலிசார் கைது செய்து சோதனை நடாத்தி வருகிறார்கள்.

இந்திய அரசாங்கமும் எச்சரிக்கை கொடுத்திருந்தும் பாகிஸ்தானிகள் தொடர்ந்து உத்தரவின்றி நுழைவதாக தெரிய வருகிறது.

இந் நுழைவுகளில் ஏதாவது சூழ்ச்சி இருக்கக்கூடுமென்றும் உத்தியோக வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஏழைகளுக்குத் தொண்டு புரிதல் என் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் விருப்பமாகும். இந்த விருப்பம் எப்போதும் என்னை ஏழைகளிடமே கொண்டுபோய்ச் சேர்த்தது. அவர்களுடன் சேர்ந்து அவர்களில் ஒருவனாகும் ஆற்றலையும் எனக்குத் தந்தது.

—காந்திமகான்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மாசி மாதம் 26ம்திகதி [9-3-68]

## நிலைமையைக் கெடுக்காதீர்

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி.' என்று தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது. நமது 'தேசியப் பத்திரிகை' சில கச்சதீவு சம்பந்தமாகப் பின்பற்றிவரும் கொள்கையைக் கவனிக்கையில் மேற்கண்ட பழமொழி தான் நினைவுவருகிறது.

கச்சதீவு பற்றிச் சில தினங்களுக்கு முன்னர் இதே பத்தியில் நாம் குறிப்பிட்ட பொழுது இலங்கை-இந்திய அரசாங்கங்கள் பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்னைக்கு அமைதியான முறையில் தீர்வுகாண முடியுமென நம்பிக்கை தெரிவித்திருந்தோம். இந்தியப்பிரதமரும், இலங்கை அரசாங்க உயர்தர அதிகாரிகளும்கூட இதே நம்பிக்கையைத் தெரிவித்திருந்தனர். ஆனால் நமது 'தேசியப் பத்திரிகைகள்' சில கச்சதீவு பற்றிப் பலவிதமான அபிப்பிராயங்கள் தெரிவித்துவருவது இப்பிரச்னைக்கு அமைதித் தீர்வுகாண்பதற்கான சூழ்நிலையைக் கெடுத்துவிடக்கூடுமோஎன்ற அச்சத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிரந்தர பிரச்னையாக இருந்துவந்த இலங்கை-இந்தியர் பிரச்னைக்குக்கூட இரு நாடுகளும் ஒரு நல்ல முடிவுகாண வழி பிறந்திருக்கிறது. இரு நாடுகளுக்கிடையிலான நல்லுறவும் வலுப்பெற்று பரஸ்பர நலலெண்ணமும், ஒத்துழைப்பும் அதிகரித்து வருகிறது. இச்சமயத்தில் மனித சஞ்சாரமற்ற, எந்தவித வளமுமற்ற ஒரு சிறு தீவு சம்பந்தமாக இரு நாடுகளின் உறவும் சீர்குலைய முயற்சிசெய்வது இரு நாடுகளின் உறவுக்கு மட்டுமல்ல, முன்னேற்றத்துக்கும், பாதுகாப்புக்குமே தீங்காகும்.

கச்சதீவு யாருக்குச் சொந்தம் என்பது பற்றி இலங்கை-இந்திய அரசாங்க அதிகாரிகள் சந்தித்துப் பேசவிருக்கின்றனர். இரு தரப்பினரும் அமைதியாக, நிதானமாக இப்பிரச்னையை ஆராய்ந்து ஒரு சுமுகமான முடிவுக்கு வருவதற்குப் பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும் இடையூறு விளைவிக்கக்கூடாது. இந்தியாவிலும் சில அரசியல்வாதிகளும், சில பத்திரிகைகளும் இதையும் ஓர் அரசியல் பிரச்னையாக்கி அதில் 'இலாபம்' தேட முனைகின்றனர். இரு நாட்டு அரசாங்கங்களும் ஒரு நல்ல முடிவுக்கு வரக்கூடிய இந்த விவகாரத்தை அனாவசியமாகப் பெரிதுபடுத்தி இரு நாடுகளுக்கும் இடையிலுள்ள உறவைச் சீர்குலைக்கக் காரணமாக இருக்கக் கூடாது என்பதே எமது பிரார்த்தனை.

# 'நீதியின் அடிப்படையில் நாடகங்கள் அமைவதே முறைமை"

## நாடகக்கருத்தரங்கு இரண்டாம் நாள்நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

''பழைய காலத்தில் மதத்தையும் நீதியையும் புகட்டிய கூத்துக்கள் தான் மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தன. ஆனால் அன்று கூத்துமூலம் அறம் வளர்க்கப்பட்டது. எந்தவொரு கலாச்சார வடிவத்திலும பிரச்னைகள் ஆராயப்பட்டு முடிவு காணப்பட்டுள்ளன. அக்கால நாடகங்களில் ஒரு நீதி போதனைகள் பொதிந்திருக்கும். அப்படியிருப்பது தான் முறைமை.''

இவ்வாறு நாடகவளர்ச்சி பற்றி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கருத்தரங்கின் இரண்டாம்நாள் நிகழ்ச்சியின்போதுபேசுகையில் திரு. இ. சிவானந்தன் தெரிவித்தார்.

இலங்கை சாகித்திய மண்டல தமிழ் நாடகக்குழுவும் யாழ் பிரதேச கலாமன்றமும் கூட்டாக நடத்தியஇக் கருத்தரங்கின் இரண்டாம் நாள் நிகழ்சிகளுக்கு கலையரசு க. சொர்ணலிங்கம் தலைமை வகித்தார். அவர்தமது தலைமையுரையில் அன்று உயர்ந்த நிலையில் இருந்த தமிழ்நாடகம் இன்று கீழ்நிலையடைந்து விட்டதென்றும் தரம் குன்றியதால் சிரிப்புக்கிடமான நாடகங்களைரசிகர்கள் நகைச்சுவை நாடகங்கள் என எண்ணுவதே இதற்கு முக்கிய காரணம் எனவும் குறிப்பிட்டார்.

திரு. ஆர் பேரம்பலம் வரவேற்புரை நிகழ்த்தினார் திரு. இ. சிவானந்தன் மேலும் பேசியதாவது:-

வாலிபர்க்கான நாடகம் பற்றி ஆராயும் பொழுது நாம் தூய மரபுமுறை வழிவந்த நாடகவரைவிலக்கணங்களிலிருந்து மட்டுமல்லாமல் புறநிலையாக எம்மிடையே நின்று நிலவும் நடைமுறை நிகழ்ச்சிகளிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் கொண்ட எழுத்தாளர்களும், நடிகர்களும் அரசாங்கமும் இருந்தாற்றான் முன்னேற்ற முயற்சிமுற்றிலும் வெற்றியடைவதாகவிருக்கும். இருப்பினும் இளைஞர் சமுதாயமே ஈழத்து நாடகத் துறையிலே புதுமையை ஏற்படுத்திப் புத்தெழுச்சியை உண்டு பண்ண வேண்டும்.''

## ''ஓரங்கநாடகத்துறை விருத்தியடைய வேண்டும்

''ஓரங்கநாடகம்'' என்னும் பொருள் பற்றி திரு ஏ. ரி. பொன்னுத்துரை பேசியதாவது:—

மேற்கு நாடுகளில் ஓரங்க நாடகத்துறை நன்கு வளர்ந்து விட்டது. ஆயிரமாயிரம் நாடகங்களை அவர்கள் எழுதிக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். அரைநூற்றுண்டுக்கு முன் புகுத்தப்பட்ட இப்புதிய துறையை நாம் புறக்கணித்தால் நாடக இலக்கியத்தைப் பொறுத்த மட்டில் நாம் மிகவும் பின் தங்கிவிடுவோம். இத்துறை வளர்க்கப்பட வேண்டியதற்கு இன்னும் ஒரு காரணமுண்டு. அன்றுவிடிய விடிய நாடகம்பார்த்தவர்கள் கூட இன்று 3 மணிநேர நாடகம் பார்க்க அலுப்படைகின்றார்கள். எனவே ஓரங்க நாடகங்களை நாம் விருத்தி செய்ய வேண்டிய நிலைக்குள்ளோம். முழு நீள நாடக எழுத்தைப் பொறுத்த அளவில் நாம் நியாயமான வளர்ச்சியைப் பெற்று விட்டோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. எனினும் ஓரங்க நாடக எழுத்தைப் பொறுத்தளவில் நாம பூரண வளர்ச்சிபெறாதிருப்பது வருந்தத்தக்கதே எனவே விருத்தி செய்ய வேண்டிய இத்துறை பற்றிய கருத்தரங்கு இந்நிலையில் பெரிதும் உதவுவதாகும்.''

## இலகுநாடகம்

தேவன்— யாழ்ப்பாணம் இலகு நாடகம் பற்றிப் பேசியதாவது;—

தயாரிப்பு வசதிகளை மனதில் கொண்டே நாடகாசிரியன் நாடகங்களை எழுதுதல் வேண்டும். ஆயினும் அவற்றிற்கு உயிரும் உருவமும் கொடுக்கும் தயாரிப்பாளர் தன்னிடத்துள்ளவசதிகளைத் திறம்படப் பயன்படுத்தி வெற்றியீட்டல் வேண்டும். இலகு நாடகம் என்பது அதைமேலும் சிக்கலாக்குவதே. உள்ள சிரமத்தைத் தவிர்க்கப்போக அது இரட்டிப்புச் சிரமத்தை இன்னொரு திசையில் திருப்பிவிடுகின்றது. வேலையைப் பலர் பங்குபோட்டு கூட்டாக அறிவுத்தேர்ச்சியால் நாடகம் படைப்பதே இலகு நாடகம் என்றுகின்றது. இன்று ஒருவரே தயாரிப்பாளராகவும், சகலகலாவல்லுநராகவும், சதாஅவதானியாகவும் விளங்கவேண்டியுள்ளது. இந்நிலைமாறி நாடகத்தின் பல்வேறு பிரிவுகளிலும் தனித்தனி மேதைகள் உருவாக்கப்பட்டால் நாடகம் இலகு ஆகிவிடும்.

## ''திறமையும் அனுபவமுமுள்ள சிறுபாத்திரங்கள் வேண்டும்''

'சொக்கன்' பேசுகையில் தெரிவித்ததாவது: நாம் இன்று முக்கியமான காலகட்டத்தில் இருக்கின்றோம். எமது நாட்டில் கலையுணர்வு விழித்துக்கொண்டுவிட்டது. எம் சகோதர இனத்தவர் கலைத்துறையிலே வெகுதூரம்முன்னேறிப் பீடுநடைபோட்டுக்கொண்டிருக்கின்றனர். நாமும் விழிப்போடிருந்து விரைந்து முன்னேறினால்தான் மற்றவர்களின் தோளோடு தோள்நின்று கலைஉலகில் முன்னேறிச் செல்லலாம். இங்கு சிறுபாத்திரங்களும் நாடகத்துக்கு மிகமுக்கியமானவை என உணர்ந்து அவற்றிற்குத் திறமையும் அனுபவமும் வாய்ந்த நடிகர்களைத்தெரிய வேண்டியது நாடகத் தயாரிப்பாளர்களின்இன்றியமையாத கடனாகும். இக்கருத்தரங்கிலேகூறப்படும்ஆலோசனைகளும், விவாதங்களும் கலைப்பாதையிலே எமக்குக் கலங்கரைவிளக்கமாக அமைதல்வேண்டும்.

சிக்கனமாயிருத்தல். மற்றது இயல்பாயிருத்தல். இவை இரண்டும் ஒன்றுடனொன்று சேர்ந்து போகக்கூடியன வல்ல. சாதாரண நாளாந்த உரையாடல்கள் இயல்பாயிருப்பினும் அவை ஒழுங்காக அமையாமல், எடுத்த காரியத்தைச் சுருக்கமாகக் கூறுமன்றி சுற்றி வளைத்துச் செல்வதுண்டு. எனவே அவை சிக்கனமாக இருக்க மாட்டா. எனவே அவை ஒழுங்குடன் சிக்கனமாக இருப்பினும் இயல்பானவையாய் இருப்பது போலத் தோன்றும் வண்ணம் அமைதல் வேண்டும்.

(கா. தி.)

## வாழ்க்கைக்கு நாடகம் தேவை

திரு. செ. கதிரேசர்பிள்ளை பேசுகையில் வாழ்வுக்கு இன்றியமையாத பெருமையானதாகிய நாடகக்கலை பாடசாலைகளிலும்பிறஇடங்களிலும் பொழுதுபோக்குக் கருவியாக மாறிக்கிடக்கின்றது என்றும் அவைதரமில்லாதவையாகவிருந்தாலும் கூட மேடையேற்றப்படுகின்றனவென்றும் தெரிவித்தார். நாடகக்கலை சிறிது இழிவானதாகக் கருதப்படுவதற்குக் காரணம் பொது மக்கள் மனதிலே இறுகப் பதிந்துள்ள தவறான அபிப்பிராயமே என்றும் இவர் தெரிவித்தார்.

திரு. எம். சண்முகநாதன் இன்பியல் நாடகங்களின் பிரச்னைகள் பற்றிப் பேசியதாவது:

## இன்பியல் நாடகம்

நாடகத்துறையின் முக்கிய கருவி உரையாடலாகும். இது இரண்டு முக்கிய [illegible] இருக்க [illegible] ஒன்று

### ஆசிரியருக்கு கடிதம்

## ஆலயப் பிரவேசம்

இதுபற்றி யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஒரு மகாநாடு கூட்டுவது விரும்பத்தக்கது. மதம், தேசிய ஒற்றுமை, கூட்டுறவு, நல்லெண்ணம் ஆகியவற்றின் நன்மைக்காக எல்லோரும் ஒருமித்து ஒரு முடிவுக்கு வருவது நல்லது. பொறுமையுடன் மற்றவருடைய கருத்துகளுக்கும் மதிப்பு கொடுத்து முடிவு செய்வது விரும்பத்தக்கது. ஆகையால் இம்மகாநாட்டை ஒரு பூர்வாங்க கூட்டமாக வைத்து தொடர்ந்து பல மகாநாடுகள் [illegible] கூடவேண்டும்

மேடைகளிலும் எழுத்து மூலமாகவும் பிரசாரம் செய்து மக்களுடைய ஆதரவையும் அன்பையும் அனுதாபத்தையும் பெற்று மனமாற்றம் அடையச் செய்ய வேண்டும்.

ஆலயப்பிரவேசத்தை ஆதரிப்பவர்களும் அதை எதிர்ப்பவர்களும் சிறிய மதப்பற்றும் ஆத்மீக வாழ்க்கையும் குறைந்தவர்களாக காணப்படுகிறார்கள்

இதற்காக இதே பிரச்னை தோன்றிய இந்தியாவிலிருந்து இந்து அறிஞர்களையும் மதத்தொண்டர்களையும் இங்கு தருவிப்பது அவசியம்.

அரசாங்கம் அமைத்த இந்து ஆலோசனை சபை, அகில இலங்கை இந்து காங்கிரஸ், இந்து மதகுருமார், சைவ பரிபாலனசபை, இந்து எம். பி.க்கள், செனட்டர்கள் ஆகியோருடைய உதவியையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டும்.

எஸ். சிவசுப்பிரமணியம்.
கொழும்பு.
7-3-68

## நாட்டிலும் நகரிலும்

யாழ்ப்பாண நன்னகரத்தில் ஓசைகள் அதிகரித்துவிட்டமையால் அது மிக விரைவில் ஒரு நன்னரகமாகப்போகிறது.

நேற்று மாலை கந்தோரை விட்டு பஸ்காலைக்குப்போயிருந்தேன், பெரியகடையைச் சுற்றியுள்ள ஒரு தெருவில் நடந்து செல்லும்போது திடீரென்று, முன்னெச்சரிக்கை இல்லாமல், ஆயிரம் அரங்கள் ஆயிரம் வாள்களை அராவின. அதைத்தொடர்ந்து நூறு பூனைகள் நூறு நாய்களுடன் கடும் போர் புரிந்தன. அதாவது அவ்வித ஓசைகள் காதைத் துளைத்தன.

சற்று விநாடிகள் கழிந்து 'தேசிய லொத்தர் சபை உங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறது' என்று ஒரு குரல் ஒலிபெருக்கியில் முழங்கியது.

அப்பால் சிறிது தூரம் செல்ல மேலும் மேற்கூறப்பட்ட ஓசைகள் கிளம்பின. 'பயங்கரமான போராட்டம்! ஆறு கல்லூரிக்கும், ஆவன்று கல்லூரிக்குமிடையே கடுமையான கிரிக்கட் மோதல்!' என்று இன்னொரு குழாய் பயங்கரமாக அலறியது.

மற்றொரு தெரு மீண்டும் அதே ஓசைகள். 'குடும்பம் முழுவதும் சேர்ந்து அவசியம் பார்க்கவேண்டியவாருசித்திரம். இன்றே வந்து பாருங்கள்!' என்று ஆசை காட்டியது இன்னொரு குழாய்.

இவையெல்லாம் நடமாடிகளிலிருந்து எதிர்பாராதவிதமாக செவிப்புலன்களைச் சாடும் ஓசைகள். நிரந்தரமாக தேநீர்க்கடையிலிருந்து புறப்படும் ஓசைக் குழப்பம் வேறு இவற்றைத் தவிர பலவிதகார்கள், பஸ்ஸுகள், சைக்கிள்கள், லொறிகள், வான்கள் முதலியவற்றிலிருந்து புறப்படும் நானாவித ஓசைகளையும் சேர்த்துக் கொண்டால் எப்படியிருக்கும்?

ஒரு முதியவர் தெருவில் நடந்து கொண்டிருக்கையில் திடீரென்றுநடமாடும் ஓசையொன்று அவரைத்தாக்கியது. மனிதர் அசைந்து போய் தாண்டிக்கொண்டு நடந்தார். பின்னால் வந்த கார் போட்ட சத்தம் அவர் காதுக்கு எட்டவில்லை. கார் ஓரடி தூரத்துக்குள் வந்து அவருடைய பிடரிக்குப் பின்னால் மறுபடியும் 'வீல்' என்று குளறியது. முதியவர் அலறிப்புடைத்துக்கொண்டு தெருவின் மறுபக்கம் ஓடினார். அங்கே பாம்பு போல் நெளிந்து நெளிந்து சைக்கிள் ஓடிவந்த ஓர் இளங்குஞ்சு அவரைத் தட்டிக் கீழே விழுத்திவிட்டு விசிலடித்துக்கொண்டு ஓடி விட்டது.

தெருவுக்குத்தெரு நடமாடித்திரியும்இந்த ஒலிபெருக்கும் வான்களால் இப்போப்பட்ட ஆபத்துகள் உண்டாவதில் ஆச்சரியமில்லை. தெருவில் பாதசாரிகள் பாதுகாப்பாக நடந்து செல்வதற்கு அவை எவ்வளவு இடையூறாக இருக்கின்றனவென்பதை நமது பொலிஸ் அதிகாரிகள் இன்னும் உணரவில்லைப் போலும்.

வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தேசிய ஒற்றுமை நிலவுவதால் இனக்கலவரம் இனிமேல் தலை தூக்காது"

## உடுப்பிட்டியில் மெண்டிஸ் பேச்சு

[நமது நிருபர் ஜே. ஜெயக்குமார்]

உடுப்பிட்டி, வெள்ளி

"தேசிய ஐக்கியத்தின் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்தலாம். எமக்கு முன்னர் சுமார் 10 வருட காலமாக ஆட்சி பீடத்திலிருந்தவர்கள் மக்களை விவசாயத் துறையில் ஆர்வப்படுத்தத் தவறிவிட்டனர். இதனால் நாம் பொருளாதாரத்துறையில் மிகவும் பின்தங்கியுள்ளோம். நமது பிரதமர் டட்லி நாட்டு மக்களுக்கு விடுத்தகோரிக்கையையேற்று விவசாயத்துறையில் தற்போது மக்கள் மிகுந்த அக்கறைகொண்டுள்ளனர். இத்துறையின் வளர்ச்சிக்கு ஊக்கம் நிறைந்த வடபகுதி மக்களின் ஒத்துழைப்பு ஆதரவு தொடர்ந்து அரசாங்கத்திற்கு தேவை"

உதவிதபால் தந்தி பொது மராமத்து அமைச்சர் திரு. வி. விஜயபால மெண்டிஸ் உடுப்பிட்டித் தொகுதிக்கு உத்தியோக பூர்வமான முறையில் விஜயம் செய்த போது மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கரவெட்டி தன்னியக்க தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தை திறந்துவைத்த பின்னர் தபால் தந்தி என்ஜினியர் திரு. அழகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உதவி மந்திரி மேலும் கூறியதாவது:

ஜனநாயகத்தை காப்பாற்றவும் தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் வடபகுதி மக்களின் பிரதிநிதிகள் எம்முடன் ஒத்துழைத்துள்ளமைக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன், இவ்வுரிமையை நிலைநாட்டவே தேசிய அரசு நிறுவப்பட்டுள்ளது. 1958-ம் ஆண்டில் துரதிஷ்டவசமாக தென்னிலங்கையின் சிலபகுதிகளில் இனக்கலவரங்கள் நடைபெற்றமை மனவருத்தத்திற்குரியது. இதுபோன்ற அசம்பாவித சம்பவங்கள் மேலும் தொடர்ந்து இந்நாட்டில் இடம்பெற தேசிய அரசு அனுமதியளிக்காது. தேசிய ஒற்றுமை தற்போது நிலவுவதால் இவ்வகையான சம்பவங்கள் நடைபெறவும் மாட்டாது. வகுப்புக் கலவர காலத்தில் தென்னிலங்கையில்கேவலமான காரியங்கள் நடைபெற்ற போதிலும் எனது பகுதியில் ஒரு வித கஷ்டமும், இன்னலும் தமிழருக்கு உண்டாகவில்லை என்பதில் நான் பெருமைப்படுகின்றேன். 1948-ல் தேசபிதா டி. எஸ். சேனநாயகாவினால் உருவாக்கப்பட்ட தேசிய இன ஒற்றுமை மீண்டும் 1956-ம் ஆண்டின் பின்னர் சிதைவுற்றது இக்காலத்தில் இன, மத ரீதியில் பாரபட்சம் காட்டப்பட்டதன் விளைவாக நாடு பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெறவில்லை.

பொருளாதார நெருக்கடி மிக்க இக்கால கட்டத்தில் ஏழை மக்களின் பிரச்னைகளை தீர்த்து வைத்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இலங்கை பல்வேறு கூறுகளாக பிளவு படுத்தப் படுவது நமது அரசாங்கத்தின் கொள்கையல்ல. எல்லாப் பகுதி மக்களின் தேவைகளையும் அபிவிருத்தி செய்து வைத்து ஒரு பகுதியேனும் துண்டிக்கப்படாது பாதுகாக்கப்படும் என்பது உறுதி. ஐக்கிய இலங்கை உருவாக்கப்படுவதினால் தான் நாட்டு மக்கள் சகலரின் பிரச்னைகளும் சமாதானமான முறையில் தீர்வு பெறும்.

யாழ்ப்பாண மாவட்டப் பகுதியின் அபிவிருத்திவேலைகளில் தற்போதைய அரசு தீவிர கவனம் செலுத்தியுள்ளது. தொடர்ந்து இப்பகுதி மக்களின் குறைபாடுகளை நாம் தீர்த்து வைப்போம்.

விவசாயத் துறையை மட்டுமல்லாது கைத் தொழில் துறையையும் விருத்தி பண்ண நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். பலபுதியகைத் தொழில் நிலையங்கள் இவ்வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நவீன வசதிகள் தொலைபேசி சேவையில் காணப்படுகின்றது. நமதுநாடு பூராவிலும்நேரடி இணைப்புமூலம் தொலைபேசி சேவையளிக்க அமைச்சுதிட்டம் வகுத்துள்ளது. இதனை அமுல் படுத்த தகுந்த நிபுணர்கள் இருந்த போதிலும் பண நெருக்கடி மூலம் உடனடியாகச் செய்ய முடியாமல் இருக்கின்றது தற்போது கொழும்பில்15மைல் சுற்றளவுக்குள் நேரடித் தொடர்பு கொள்ள முடியும் இவ்வித சேவைஏனைய பகுதிகளில் விரைவில் நிறுவப்படும்.

திரு. வீ. கே. ஆறுமுகம் உதவி அமைச்சரை வரவேற்றுப் பேசினர். திருவாளர்கள் சிறீஸ்கந்தராசா, தர்மலிங்கம் ஆகியோர் உட்பட வேறு பலரும் இவ்விழாவில் உரை நிகழ்த்தினர்.

# புளியம்பழத்தினால் பெண்கள் சண்டை

## ஒருவர் ஆஸ்பத்திரியில் மற்றவர் பொலிஸ் பாதுகாப்பில்

அளவெட்டி, வெள்ளி

பெண்களுக்கிடையே புளியம் பழத்தால் ஏற்பட்ட சண்டையில் ஒரு பெண் காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றுமொரு பெண் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

வசாவிளானைச் சேர்ந்த அருணாசலத்தின் மகள் சுகிர்தராணி [வயது 24] என்பவர் தனது தாய்க்கும் பெரிய தாயாருக்கும் சொந்தமான காணியில் உள்ள புளியம் மரத்தில் உள்ள புளியம்பழங்களை பொறுக்கச் சென்றபோது பெரிய தாயாரான கந்தையா பெண் இராசம்மாவுக்கும் தமக்கும் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து இராசம்மா தம்மைக் கத்தியால் வெட்டியதாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

இதுசம்பந்தமாக விசாரணை நடத்திய காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு வி. வி. செல்லையா சந்தேகத்தின் பேரில் கந்தையாஇராசம்மா என்றபெண்ணைக் கைது செய்து றிமாண்டில்வைத்துள்ளார். விசாரணை தொடர்கிறது.

## திருட்டு அதிகரிப்பு

குரும்பசிட்டி, வெள்ளி

வல்வெட்டித்துறை ஊறணி என்ற கிராமத்தைசேர்ந்த முருகேசு பெண் கதிராயி பிள்ளை என்பவர் வல்வெட்டித்துறைப் பொலீஸ்நிலையத்தில், தமது வீடு உடைக்கப்பட்டு, சுமார் 328 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி மற்றும் துணிகளும் திருடப்பட்டுள்ளதாகப் புகார்செய்துள்ளார். இப்புகார் சம்பந்தமாக விசாரணை நடத்திவரும் பொலிஸார் சந்தேகநபர் ஒருவரைத் தேடிவருகின்றனர்.

வல்வெட்டித்துறை வாசியான மற்றொருவரான நவரத்தினம் பெண் அழகையா என்பவரும் தமது வீட்டில் திருடர் புகுந்து சுமார் 200 ரூபா பெறுமதியான புடவைகள் திருடியுள்ளதாகப் புகார் தெரிவித்துள்ளார் இப்புகார் குறித்தும் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். இரு சம்பவங்கள் இடம்பெற்றுள்ள இடங்களிலும் பொலிஸார் கைவிரல் அடையாளங்களை பதிவுசெய்துள்ளனர்.

## விசாரணை ஒத்திவைப்பு

குரும்பசிட்டி, வெள்ளி

மல்லாகம் பதில் நீதிபதி திரு. இளையதம்பி சங்கானை கொலை வழக்கு விசாரணையை மீண்டும் இம்மாதம் 20ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

சங்கானை நிச்சாமத்தைச் சேர்ந்த வல்லிபுரம் செல்லமுத்து என்பவரை இவ் வருடம் ஜனவரி மாதம் 14-ந் திகதிகொலை செய்ததாக வன்னியன் சின்னத்தம்பி பாலன் பசுபதி. ஆறுமுகம், தியாகராஜா ஆகியவர் மீது இவ் வழக்கில் சங்கானைப் பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ் வழக்கு விசாரணையின் போது அரசாங்க இரசாயன பரிசோதருக்கு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ள தடயப் பொருட்களும் அறிக்கையும் கிடைக்கவில்லை என பொலிஸ் தரப்பில் எடுத்துக் கூறப்பட்டது.

எதிரிகள் தரப்பில் திரு. சிவ ஸ்ரீதரனும், பொலிஸ் தரப்பில் வழக்கை நடாத்த திரு. ஆர். ஜே. செல்வரத்தினமும் ஏற்பட்டிருந்தனர்,

## வாலியன் கைது

அளவெட்டி, வெள்ளி

சந்தேகிக்கப்படும் வகையில் இரவு நேரத்தில் வீதியால் சென்று கொண்டிருந்த வாலிபன் ஒருவனை நேற்று இரவு காங்கேசன்துறைப் பொலிஸார் கைது செய்தனர்

விசாரணையின் போது கொழும்பு கொம்பனித் தெருவில் வசிப்பதாகவும், இப் பகுதியில் ஏதாவது வேலையில் ஈடுபடுவதற்காக இரவு யாழ் தேவியில் வந்ததாகவும் அவர் கூறினார்.

இது சம்பந்தமாக காங்கேசன்துறைப் பொலிஸார் கொழும்பு பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டுள்ளார்கள். அந்த வாலிபன் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

# ஆசிரிய இடமாற்றங்கள் மே மாதத்திற்குஒத்திவைப்பு?

உடுப்பிட்டி, வெள்ளி

இம் மாதம் நடைபெறவிருந்த ஆசிரியர் இடமாற்றங்கள் சில பிரச்சனைகள் காரணமாக மே மாதத்துக்குப் பின் போடப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இடமாற்றம் காரணமாக பாடசாலைகளில் தற்போது நிலவி வரும் சகல பிரச்சனைகளும் இவ் விடைக் காலத்தில் தீர்த்து வைக்கப் படுமெனத் தெரிய வருகிறது.

மாவட்ட வித்தியாதிபதிகளே இவ் இடமாற்றங்களுக்குப் பொறுப்பாயிருப்பார்களெனவும் அறியப்படுகிறது.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம். சனி

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இம் மாதம் 10-ம் திகதி மாலை 6.15 மணிக்கு கல்லூரி முன்றலில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நீதியரசர் கலாநிதி எச். டபிள்யூ தம்பையா கலந்து கொள்வார். திருமதி. தம்பையாவெற்றி பெற்றோருக்குப்பரிசில்களை வழங்குவார்.

பூங்காவிஸ்தரிப்பு

# வழக்கறிஞர் சங்கம் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்கா விஸ்தரிப்பதையிட்டு யாழ்ப்பாணம் வழக்கறிஞர் சங்கம், மாநகர சபை விசேஷ ஆணையாளருக்கு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் வழக்கறிஞர் சங்க செயலாளர் திரு. தா சங்கரப்பிள்ளை, விசேஷ ஆணையாளருக்கு எழுதியுள்ள ஓர் ஆட்சேபக் கடிதத்தில், அந்தநிலம் கோர்ட்டின் தேவைகளுக்காக சேமித்து வைக்கப்பட்ட நிலம் எனத் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

ஆரம்பத்தில் பூங்காவிற்கு நிலம் வகுக்கும் பொழுது, ரோட்டிற்கும், பூங்காவிற்கு மிடையில் ஒரு வெளி நிலம் கோர்ட்டின் உபயோகத்திற்காகவும், வேறு எதிர்பாராத காரணங்களுக்காகவும் தேவைப்படும என்று தீர்மானிக்கப்பட்டது. இதனால் இந்த நிலத்தை வெளியாக விட்டு, ரோட்டுக்கு அண்மையாக பூங்கா வைக்காது இந்நிலம் வெற்றிடமாக வைக்கப்பட்டது.

ஒரு காலத்தில் இந்நிலத்தில் தற்காலிகமாகநீதி மன்றம் அமைக்கப்பட்டிருந்தது. தற்பொழுது கோர்ட்டிற்கு வருபவர்களின் வாகனங்கள் இந்நிலத்தில்தான் நிறுத்தப்படுகிறது. ஆதலால் இந்நிலம் கோர்ட்டின் தேவைக்காக சேமித்துவைக்கப்படவேண்டியநிலமாகும். இதனை பூங்கா விஸ்தரிப்பதற்கு எடுப்பது முறையற்றதாகும்.

## இன்றைய பலன்

[9-3-68]

சனிக்கிழமை

[மாசி மீ 26உ]

திதி- தசமி பின்இரவு 4-08

நட்சத்திரம்- திருவாதிரை பகல் 4-25 மேல் புனர்பூசம்.

ராகுகாலம்- 9-24—10-54.

சுபநேரம் 3-24 — 4-54.

இன்று பிறந்தவர்களுக்கு இவ்வாண்டு வாழ்த்தும் கிடைக்கும், வழியும் பிறக்கும். கற்றவர்கள் ஆதரவு மெத்தவுண்டு. தாய் வழியால் பூமிப் பிணக்குக்கு இடமுண்டு. கலைஞர்கள் போற்றப்படுவார்கள். செல்லுமிடம் எல்லாம் நல்ல வரவேற்புக்கிடைக்கும். நண்பர்களுக்கு உதவும்வகையில் சில கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டியிருக்கும். புகழ்ச்சி மொழிகளைக் கேட்டு நிதானம் இழந்துவிடாமல் நடந்துகொள்ளவும். வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்தல் நன்று.

மேஷம்- மனம்போல் வாழ்வு, மைந்தர் புகழ்

ரிஷபம்- எல்லை தொல்லை சண்டையைத் தவிர்.

மிதுனம்- சந்தேக வியாதி, விஞ்ஞ பீதி

கடகம்- உபகாரச் சிந்தை, உள்ளப்பூரிப்பு

சிம்மம்- உடல் நலம் கெடும் உபவாசம் இரு

கன்னி- திடீர் வரவு, திகைக்க வைக்கும் உறவு

துலாம்- பாக்கிய விருத்தி, பரம் பொருள் சிந்தை

விருச்சிகம்- பக்கத்திலே படுகுழி, உஷாராகவிரு

தனுசு- இருமனம் கலக்கும், இனிமையும் பிறக்கும்

மகரம்- போற்றவரும் கூட்டம் தூற்றவும் செய்யும்

கும்பம்- இறைவழி நாட்டம், புதிய பாதை

மீனம்- வலிமை சேரும், வஞ்சகர் ஓடுவர்

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## அல்லைப்பிட்டி கி.ச. பிரச்னை

யாழ்ப்பாணம், வெள்ளி

அல்லைப்பிட்டி, மண்டைதீவு இரண்டையும் தனித்தனிச் கிராமசபையாகப் பிரிக்க வேண்டுமென்ற இப்பகுதி மக்களின் நீண்டகால வேண்டுகோளுக்கமைய ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் இதுபற்றி உள்ளூராட்சி அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

அல்லைப்பிட்டி கிராமச் சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 23ந் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நியமனத் திகதியை ஒத்தி வைத்து, கிராம சபையைப் பிரித்தபின் தேர்தலை நடத்துமாறும், இதற்கான அறிவித்தலை உடன் அனுப்புமாறும், மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கமும், அல்லைப்பிட்டி பொது ஸ்தாபனங்களும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்தை அவசரத் தந்தி மூலம் கேட்டுள்ளனர்.

[கா. நி.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மாணவர்களின் ஒத்துழைப்பால் நாடு தன்னிறைவு காணமுடியும்"

## முல்லைத்தீவில் காரியாதிகாரி பேச்சு

முல்லைத்தீவு, வெள்ளி

"நாட்டின் உணவு உற்பத்தியில் பாடசாலை மாணவ மாணவிகளான நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிற்கு நான் அரசாங்கத்தின் சார்பில் நன்றி கூறுகிறேன். தேசிய அரசாங்கம் மேற்கொண்டுள்ள உணவு உற்பத்தித் திட்டத்துக்கு இன்று பாடசாலைப் பிள்ளைகளாகிய நீங்கள் அளிக்கும் ஒத்துழைப்பினால் நமது நாடு எதிர்காலத்தில் உணவில் தன்னிறைவு காணுமென்பதில் ஐயம் இல்லை. பாடசாலை மாணவர்கள் உணவு உற்பத்தியில் பங்குபற்றும்போது அவர்கள் சுகதேகிகளாகவும், திடகாத்திரமானவர்களாகவும் இருக்கவேண்டுமென்பதினால்தான் இன்று உடற்பயிற்சி மூலம் திடமான பிரஜைகளை அரசாங்கம் உருவாக்க எண்ணியுள்ளது."

இவ்வாறு முல்லைத்தீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளின் உடற்பயிற்சி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முல்லைத்தீவுப் பிரிவுக் காரியாதிகாரி திரு. எஸ். கணேசநாதன் தேசியக்கொடியை ஏற்றிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு சைவப் பாடசாலை, மகளிர் பாடசாலை முதலியவற்றின் மாணவ மாணவிகளது அணிவகுப்பு மரியாதையைக் காரியாதிகாரி ஏற்றுக்கொண்டார். மகாவித்தியாலய உப-அதிபர் திரு. முத்தையா நன்றி தெரிவித்துப் பேசினார்.

### "விசேஷ ரயில் சேவை வேண்டும்"

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திலுள்ள சகல பாடசாலைகளும் இப்பொழுது காலை 8-35 மணிக்கே ஆரம்பிக்கப்படுவதனால் பாடசாலைப் பிள்ளைகளின் வசதிக்காக காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரையும் ஒரு விசேஷ புகையிரத சேவையை ஆரம்பிக்குமாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி இலங்கைப் புகையிரத இலாகா அதிபரைக் கேட்டுள்ளது.

இந்த விசேஷ சேவையை காலையில் காங்கேசன்துறையிலிருந்து 7-15க்கும், மாலையில் யாழ்ப்பாணத்திலிருந்து 4-15க்கும் ஆரம்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(வி. நி.)

### உதவி அதிகாரியாக நியமனம்

யாழ்ப்பாணம், சனி

கோண்டாவில் பஸ் டிப்போ உதவி அதிகாரியாக திரு. என். தியாகராஜா இம்மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார். இவர் மட்டக்களப்பு பஸ் டிப்போ அதிகாரியாகவும் அதன்பின் கொழும்பு மத்திய பணிநிலைய உதவிப் பொறுப்பாளராகவும் கடமையாற்றினர்.

# செய்திச் சுருக்கம்

### பிரசார இயக்கம்

அடுத்தமாதம் முதல் வடக்கு மாகாணங்களில் பிரசார வேலைகளை மேற்கொள்ளச் சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது. சிறுபான்மையினரைக் கவருவதற்கான பிரசார முறைகளை தற்போது கட்சி மேலிடம் ஆராய்ந்து வருகிறது. இது ஒருபுறமிருக்க, கூட்டாட்சிக்கட்சிகள் யாவும் தத்தம் வாலிபர் இயக்கங்களைப் புனரமைப்புச் செய்வதிலும் கவனம் செலுத்துகின்றது.

### கதிர்காமத்தில் பூமியதிர்ச்சி

கதிர்காமத்தில் நேற்று அதிகாலையில் 4 மணி 50 நிமிடமளவில் பூமியதிர்ச்சியின் அறிகுறிகள் காணப்பட்டன. இது சுமார் 30 விநாடிகள் வரை நீடித்தது. இவ்வதிர்ச்சி முருகன் கோவில் பூசை நேரத்தில் நடைபெற்றது. இவதிறை கண்ணுற்ற பக்தர்கள் மத்தியில் பெரும் பரபரப்பேற்பட்டது.

### அமைச்சர் உத்தரவு

சுகாதார இலாகாவில் கடமையாற்றும் சகல தொழிலாளர்களுக்கும் உடனடியாக உத்தியோக உடைகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் திரு. ஈ.எல். சேனநாயகா சகல சுகாதார சேவை சுப்ரீன்டன்களுக்கும் கட்டளை விடுத்துள்ளார். இரண்டு மூன்று வருடங்களாக தமக்கு உத்தியோக உடைகள் விநியோகிக்கப்படவில்லையெனத் தொழிலாளர் பலர் புகார் செய்திருந்தனர்.

### முன்னணிக் கூட்டம்

கல்முனையில் நடந்த உப தேர்தலில் இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி ஈட்டிய வெற்றியைக்கொண்டாடுமுகமாக நாடெங்கிலும் பல கூட்டங்களை நடாத்த முன்னணி தீர்மானித்துள்ளது முதல் கூட்டம் கொழும்பு பாபர்வீதிச் சந்தியில் நடைபெறும். திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா, டாக்டர் என்.எம்.பெரேரா ஜனாப் எம். சி. அகமத் ஆகியோர் பேசுவார்கள்.

### 2500 சீன பல் டாக்டர்

இலங்கையில் ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு சீன பல் டாக்டர்கள் உள்ளனர். இவர்களில் ஏறக்குறைய தொண்ணூறு சதவிகிதத்தினருக்கு பல் வைத்தியர்களுக்குத் தேவையான கல்வித்தராதரங்கள் இல்லையென கல்வி அமைச்சு நடத்திய பரிசீலனை யொன்றில் தெரியவந்துள்ளது.

### தபால் ஊழியர் விடுதலை

1963-ம் ஆண்டு மார்ச் 9-ம் திகதி பண்டாரவளை தபாற்கந்தோருக்கும் பதுளை தபாற்கந்தோருக்குமிடையில், வழியில் காணாமல் போன 20,000 ரூபா சம்பந்தப்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த எச். எம். பிரேமசிறி என்ற தபால் சேவகர் விடுதலை செய்யப்பட்டார். இவ்வழக்கில், தபால் சேவகரான பிரேமசிறி தபாற் பையையும் அதனுள் இருந்தவற்றையும் மோசடிசெய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

துப்பாக்கி பிரயோகம்

# சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்

குரும்பசிட்டி, வெள்ளி

சுன்னாகம் பிரேத ஊர்வல துப்பாக்கிப் பிரயோகத்தில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் சந்தேக நபர்கள் எட்டுப் பேர் மீண்டும் மல்லாகம் பதில் நீதிபதி திரு. இளையதம்பி முன்னிலையில் ஆஜராகினர்.

இச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ள மற்றும் நான்கு சந்தேகநபர்கள் பொலிசாரால் தேடப்பட்டு வருவதால் பொலிஸ் தரப்பில் சந்தேக நபர்கள்மீது குற்றம்சுமத்தி வழக்கு இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை.

இம் மாதம் 29-ந் திகதி வழக்குத் தாக்கல் செய்வதற்கு நீதிபதி பொலிசாருக்குத் தவணை வழங்கியுள்ளார்.

சந்தேக நபர்கள் எண்மரும் தலா 1000 ரூபா பிணையில் செல்ல முன்னரே நீதிபதியால் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களின் சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகியுள்ளார்.

தீண்டாமைப்பிரச்னை

# சமாதானமுறையில் தீர்க்கப்பட வேண்டும்

உடுவில், வெள்ளி

"சாதிப்பாகுபாட்டை அடிப்படையாக வைத்து தமிழ் மக்களிடையே பிளவையும் அதே நேரத்தில் வேறு சமயத்தவர்களுக்கு நமது பலவீனத்தையும் அதன் மூலம் அவர்கள் தமது சமயத்தைப் பலப்படுத்திக் கொள்ளும் வழிவகைகளையும் காட்டிக் கொடுப்பதில் ஒரு சிலர் முனைந்திருப்பது தமிழ் இனத்தின் அழிவுக்கு அத்திவாரமாக அமையும்."

உடுவிலில் நடைபெற்ற சைவசமயசமாதான பணிக்குழுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய திரு. இ. துரை மேற்கண்டவாறு கூறினார்.

திரு. எஸ். எம். காசியப்பலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. இ. துரை தொடர்ந்து பேசியதாவது:—

இந்து மக்களிடையே பிரச்னைக்குள்ளாகி இருக்கும் சமூக ஏற்றத்தாழ்வு இந்துக்களாலே தீர்க்கப்பட வேண்டியது. இது விஷயத்தில் சைவ சமயமல்லாத மறுசமயத்தவர்கள் தலையிடுவது நல்லதல்ல. சாதியின் அடிப்படையில் பிரச்னையை உருவாக்கி அரசியல் செல்வாக்கை பெற்றுவிடச் சிலர் நினைக்கின்றார்கள். சமாதானமான முறையில் தீர்க்க வேண்டிய சிறு பிரச்னையை பெரிதாக்கி சிக்கலாக்குவது நல்லதல்ல. முன்னர் இருந்த நிலையை விட இந்துக்களிடையே சமூக ஏற்றத்தாழ்வு இன்று எவ்வளவோ குறைந்து விட்டது. இன்னும் ஒரு சில வருடங்களில் சமூக ஏற்றத் தாழ்வு இருக்க மாட்டாது.

திரு. எஸ். சுந்தரலிங்கம் பேசுகையில், சைவத்தையும், தமிழையும் பிறருக்கு காட்டிக் கொடுக்க முற்படுபவர்களை எதிர்கால சந்ததியினர் இகழுவர். தமிழையும், இந்து சமயத்தையும் பாதுகாக்க வேண்டுமென்றால் பிற சமயத்தவர் இப்பிரச்னையில் தலையிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

திருவாளர்கள் ஆர். எஸ். கோபாலகிருஷ்ணன், எம். எம். வைத்திலிங்கம், எம். பாக்கியநாதன் ஆகியோரும் பேசினார்கள்.

### போட்டிகள்

உடுவில், வெள்ளி

வலிகாமம் வடக்கு ஆசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்படும் சங்கீத பேச்சுப் போட்டிகள் இம்மாதம் 10-ந் திகதி நடைபெறும்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இப்போட்டி நடைபெறும்.


# கழிவுக் காகிதத்தை பணமாக்க உதவுக

"கழிவுக் காகிதம்" என்று எதனையும் எறியவேண்டா

தினமும் உங்கள் அலுவலகத்திலும் வீட்டிலும் குப்பைக் கூடையில் எறியப்படும் பல்லாயிரம் எடையுள்ள காகிதங்கள் எம் காகிதக் கைத்தொழிலுக்கு முக்கியமான மூலப் பொருளாகும்.

இக்காகிதத்தைச் சேகரித்து நாட்டுக்கு வெளிநாட்டுச் செலவாணியைச் சேமியுங்கள்

வீணுக எறியப்படும் இப்பொருளில் நின்று மேலதிகப் பணம் பெறுங்கள்

கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம் கழிவுக் காகிதச்சேகரிப்பை பொறுப்பேற்க சமூக சேவா சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருகின்றது.

விபரங்களுக்கு:

கிழக்கிலங்கை கடதாசிஆலைக் கூட்டுத்தாபனம்
135, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்து—மத்தியகல்லூரி கிரிக்கட் போட்டி

## வெற்றி தோல்வியில்லை

யாழ்ப்பாணம், சனி

தொடர்ந்து இருநாட்களாக யாழ்ப்பாண கிரிக்கெட் ரசிகர்களைப் பெரும் பரபரப்பில் ஆழ்த்திய யாழ். மத்திய கல்லூரி — யாழ். இந்துக் கல்லூரி கிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்தியகல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயக்குமார் 76 ஓட்டங்களும், திலையம்பலம் 74 ஓட்டங்களும் பெற்றனர். இக்கட்டத்தில் யாழ். இந்துவின் பந்தெறி வீரர்களான விபுலானந்தா 50 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கெட்டுகளையும், சுந்தையா 49 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். யாழ். இந்துக்கல்லூரி துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்ரீதரன் 41 ஓட்டங்களும், சின்னராசா 26 ஓட்டங்களும், சற்குணசீலன் 19 ஓட்டங்களும், ராஜகுமார் தனது விக்கெட்டை இழக்காமல் 18 ஓட்டங்களும் பெற்றனர். இக்கட்டத்தில் யாழ். மத்தியகல்லூரியின் பந்தெறி வீரர்களான தில்லையம்பலம், ஜீவநாதன் ஆகியோர் முறையே 32, 37 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு தலா இரு விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

2-ம் இனிங்ஸ் ஆட்டத்தில் யாழ். மத்தியகல்லூரி துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயரத்னகுமார் 31 ஓட்டங்களும், பாலேந்திர 17 ஓட்டங்களும், சுந்தரலிங்கம் 16 ஓட்டங்களும் பெற்றனர். இக்கட்டத்தில் யாழ். இந்துவின் பந்தெறி வீரரான விபுலானந்தா 23 ஓட்டங்கள் நஷ்டத்திக்கு 6 விக்கெட்டுகள் வீழ்த்தினர். அமலகுகன், சுந்தையா ஆகியோர் முறையே 35, 5 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு தலா இருவிக்கெட்டுகளை வீழ்த்தினர். யாழ். இந்துக்கல்லூரி துடுப்பெடுத்தாடி 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 123 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் உதயலிங்கம் 42 ஓட்டங்களும், ஸ்ரீதரன் 23 ஓட்டங்களும், தர்மரத்தினம் 16 ஓட்டங்களும் பெற்றனர், இக்கட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியின் பந்தெறிவீரர்களான தில்லையம்பலம், புரட்சிதாசன் ஆகியோர் முறையே 26, 24 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். [வி நி]

# சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றது

குரும்பசிட்டி, வெள்ளி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் கலந்துகொண்ட வருடாந்தசிநேக பூர்வமான கிரிக்கெட் போட்டியில் இறுதி நேரத்தில் கடுமையான முயற்சியாக துடுப்பெடுத்தாடி செ.பற்றிக்ஸ் 9 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. தெல்லிப்பழை மகாஜன கல்லூரிமைதானத்தில் இரு தினங்கள் தொடர்ந்து இப்போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மகாஜனக் கல்லூரியினர். குமாரி உமணித்தியாலத்தில் எல்லாவிக்கெட்டுகள் நஷ்டத்துக்கு மொத்தம் 212 ஓட்டங்களைப் பெற்றனர். இதில்ராஜகாந்தன், இரத்தினராஜா, சிறீஸ்கந்தராசா, திலகநாதன் ஆகியோர் முறையே 41, 37, 27, 25 ஓட்டங்களை தமது கோஷ்டிக்கு கைப்பற்றிக் கொடுத்தனர் இச் சந்தர்ப்பத்தில் பற்றிக்ஸ் கப்டன் புவனேந்திரா திறமையாக பந்துவீசி 59 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுக்களை வீழ்த்தினர். ஜோசேப் 48 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

செ.பற்றிக்ஸ் தமது முதல் இன்னிங்ஸில் ஆரம்பத்தில் சடுதியாக விக்கெட்டுகளை இழக்க நேரிடினும் பிற்பகுதியில் சிறந்த துடுப்பெடுப்பாட்டம் காணப்பட்டது. இதனால் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றனர். இவற்றில் வெல்மென், இளந்திரன்ஸ், கனகநாயகம், விஜயகுமார் என்போர் 52, 37, 23, 18 ஓட்டங்களைப் பெற்றனர். இந்நேரம் மகாஜன வீரர் ஸ்ரீகாந்தா 65 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து 2-ம் இன்னிங்ஸில் மகாஜன திரும்ப 156 ஓட்டங்களை எடுத்தது. இதில் ராஜகாந்தன் 50, மனோகரன் 41 ஸ்ரீகாந்தா 17 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். இதனையடுத்து ஆட்டம் ஆடிய சென். பற்றிக்ஸ் வீரர்கள் ஒரு விக்கெட்டை இழந்தநிலையில் போட்டியை நிறுத்திக்கொண்டனர். இச்சந்தர்ப்பத்தில் 181 ஓட்டங்களை அபாரமாக துடுப்பெடுத்தாடி பெற்றுக் கொண்டனர். இதில் புவனேந்திரா, குலநாதன் ஆகியோர் ஆட்டமிழக்காமல் தலா 91, 20 ஓட்டங்களைப் பெற்றனர், வீரணகுலசிங்கம் 64 ஓட்டங்களைக்கைப்பற்றினர்.

## யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம். வியா

சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரிக்கும்வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே மிகவும் விறுவிறுப்பாக வட்டுக்கோட்டையில் நடைபெற்ற ஒரு கிரிக்கெட்போட்டியில் யாழ்பாணக்கல்லூரி கடைசி நேரத்தில் கடுமையாக மோதி 2 விக்கெட்டுகளால் ஸ்கந்தவரோதயக் கல்லூரியைத் தோற்கடித்தது.

முதல் இனிங்ஸில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. ஸ்கந்த வரோதயக் கல்லூரி துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது. 2ம் இனிங்ஸ் ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப்பெற்றது. யாழ்ப்பாணக் கல்லூரி துடுப்பெடுத்தாடி 6 விக்கெட்டுகளை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. (வி.நி.)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

பருத்தித்துறை யுனைட்டெட் விளையாட்டுக் கழகத்தின் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றபோது மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்குழுவின் கப்டனாக திரு. வீ ஸ்ரீரங்கநாதனும், உதவிக் கப்டனாகத் திரு. ஆர். யோகேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்குழுவிரைவில்வடமராட்சியில் முதற்தடவையாகஜ கிரிக்கெட் சுற்றுப்போட்டியை நடாத்தநடவடிக்கை எடுத்துவருகின்றது.

## புதிய நிர்வாகிகள்

அளவெட்டி, வெள்ளி

ஊறணி புனித அந்தோனியார் கிராம முன்னேற்ற சனசமூக நிலையப் பொதுக்கூட்டம் திரு.யோமாக்குப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது நடப்புவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்- வண. பங்குத்தந்தை பி.எஸ். மரியதாசன்.

தலைவர்- திரு. தே. யோசேப், உபதலைவர்- திரு யோ. நீக்கிலாப்பிள்ளை, இணைக்காரியதரிசிகள்- திரு. மு.செல்வராசா, திரு. அ. தேவதாஸ். தனாதிகாரி- திரு.மு அருளப்பு. திருவாளர்கள் கி. [illegible] சிசியஸ். தே. மிக்கேல் பிள்ளை. சந்தியாப்பிள்ளை பி.பார்க்கியநாதர் அ.ஞ.சாக். பி. விசேர்திக்குரூஸ் ஆகியோரைக் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## எதிரிகள் விடுதலை

குரும்பசிட்டி, வெள்ளி

சடந்த வருடம் ஆடி மாதம் 22ந் தேதி மயிலிட்டியைச் சேர்ந்த வீ. சண்முகநாதன், வீ. சிவானந்தன், வீ. தேவானந்தன் ஆகிய மூவரும் அதேயிடத்தைச் சேர்ந்த பொன்னையா கைலகிரிநாதன் என்பவரைக் கத்தியால் குத்திப் படுகாயப்படுத்தியதாக காங்கேசன்துறைப் பொலிஸாரால் தொடரப்பட்டிருந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணை முடிவில் சாட்சியங்கள் முரண்பாடுகளாகக் காணப்படுவதால் எதிரிகளை விடுதலைசெய்வதாகக் கூறி மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் தீர்ப்பளித்தார்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர்.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

சனி 9-3-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 தேவிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல் வளை, 8-00 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 பாட்டு, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 [illegible]

# தேசிய கலாச்சார விளையாட்டு விழா

குரும்பசிட்டி, வெள்ளி

புதுவருடத் தினத்தன்று சுன்னாகம் பொலிஸ் நிலையத்தினர் தேசிய கலாச்சார, விளையாட்டுவிழாவொன்றை வழமைபோல் இவ்வாண்டும் நடாத்தவிருக்கின்றனர் பொலிசார் — பொது மக்கள் மத்தியில் நல்லுறவு வளர்க்கும் பொருட்டு ஏற்பாடு செய்யப்படும் இவ்விழாவில் சுன்னாகம் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்டவர்கள் கலந்து கொள்வார்கள்.

இவ்விழா சம்பந்தமான ஏற்பாடுகளை கவனிக்க இன்ஸ்பெக்டர் ஆர் ஏ ஜேக்கப் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இப்பகுதி விளையாட்டுப் போதனாசிரியர்களும், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்,

இவ்விழாவில் 25 மைல் சைக்கிள் ஓட்டம், 10 மைல் மரதன் ஓட்டம், போர்த் தேங்காய் அடித்தல், வழுக்கு கம்பம் ஏறுதல் கைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களிலும் போட்டிவைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரவு திறந்தவெளியரங்கில் நடைபெறும் கலாச்சார விழாவில் இசை. நடன நாடகக்கலைநிகழ்ச்சிகள், அழகு ராணிதெரிவு, வாண வேடிக்கை போன்றநிகழ்ச்சிகள் நடாத்துவ தென்றும் முடிவு செய்துள்ளனர்.

இவ் விளையாட்டுவிழா சம்பந்தமாக நிர்வாகக் குழுவொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

# ஆசிரியர் சங்கங்களின் கருத்தரங்கு 13-ல்நடைபெறும்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைத் தேசிய அரசாங்கத் தொழிற்சங்க சம்மேளனத் தலைமையில் இணைந்துள்ள ஆசிரியசங்கங்களின் கருத்தரங்கொன்று மிகப் பரந்த அளவில் இம்மாதம் 13-ந் தேதி காலை யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கருத்தரங்கில் அகில இலங்கைத் தமிழ்த் தலைமையாசிரியர் சங்கம், அகில இலங்கைச் சுவீகரிக்கப்பெற்ற தமிழ்பாடசாலை ஆசிரியர் சங்கம், தராதரப்பத்திர ஆசிரியர்சங்கம், அரசினர் தராதரப்பத்திர ஆசிரியர்சங்கம் ஆகியவை கலந்துகொள்கின்றன.

கருத்தரங்கில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

அகில இலங்கை ரீதியில் "இன்றைய கல்வி நிலையும் ஆசிரியர்களை எதிர்நோக்கும் பிரச்னைகளும்" பற்றி இக்கருத்தரங்கு விரிவாக ஆராயுமெனத் தெரியவருகிறது.

இக்கருத்தரங்கில் அகில இலங்கையிலுமிருந்து ஆசிரியர்கள் கலந்துகொள்வார்களெனத் தெரியவருகிறது.

# வாக்காளர் ஆட்சேபனை; விசாரணை நடைபெற்றது

குரும்பசிட்டி, வெள்ளி

1967-ம்ஆண்டின் பாராளுமன்ற இடாப்பு திருத்தியமைத்தலின்போது காங்கேசன் துறை, உடுவில் தொகுதிவாக்காளர் செய்திருந்த ஆட்சேபனை, கோரிக்கைகள் குறித்து வலி. வடக்கு காரியாதிகாரி அலுவலகத்தில் கச்சேரி உதவி அதிகாரி திரு. எஸ். கந்தசாமி விசாரணை நடாத்தினார்.

இருதொகுதிகளிலிருந்தும் 56 மனுக்கள் அனுப்பப்பட்டிருந்தன. இவைகள்பற்றி இவர்சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர்களுடன் பரிசிலனை நடாத்த வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இவ் விசாரணையின்போது கிராமசேவையாளர் எவரும் மோசடி செய்துள்ளதாகப் புகார் தெரிவிக்கப்படவில்லை- சங்கானையிலுள்ள காரியாதிகாரி வலி. மேற்கு பிரிவுக்கந்தோரிலும் இவ்வகையான விசாரணைகளை திரு. கந்தசாமி வியாழக்கிழமை நடாத்தியுள்ளார்.

விசாரணையின்போது இடாப்பில் பதியப்பட்டிருந்த சிலரும் மனுப்பண்ணி தமது பெயர்களை சேர்க்க கோரியிருந்தமையும், வயதுக் கட்டுப்பாட்டிற்கு குறைந்துள்ளோரும் கண்டு பிடிக்கப்பட்டனர் எனத் தெரிகிறது.

## கூட்டுறவு தினம்

யாழ்ப்பாணம், சனி

சர்வதேச கூட்டுறவுத் தினம் இவ்வருடம் ஜூலை மாதம் முதலாம் திகதி இலங்கையில் கொண்டாடப்படவிருக்கிறது.

இக் கொண்டாட்டங்களை விரிவான முறையில் நடாத்துவதற்கான ஒழுங்குகளை கூட்டுறவுப் பகுதி இலங்கை பூராவிலுமுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்களுடன் சேர்ந்து ஏற்பாடுகளைக் கவனித்து வருகின்றது.

மாவட்டரீதியாக நடாத்தப்படவிருக்கும் இக்கூட்டுறவுதின விழாவை முன்னிட்டு கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி ஆகியவற்றை நடாத்தவும், கருத்தரங்கு போன்றவற்றை ஒழுங்குசெய்யவும் கூட்டுறவுப் பகுதியின் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. [கா. நி.]


கைத்தறி நெசவாளர்களுக்கு

ஓர் அறிவித்தல்

உங்கள் தறிகளில் உற்பத்தி செய்யும் ஜவுளிகளை நியாயமான விலைகளில் எம்மிடம் விற்பனை செய்யலாம்.

S. R .செல்லத்துரை,
216, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 296


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நாவலர் பாடசாலை நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், சனி
நாவலர் பெருமான் முதன் முதலாக ஸ்தாபித்த வித்தியாசாலை நூற்றாண்டு விழா ஏப்ரல் மாதம் 7-ம் திகதி நிகழவிருக்கிறது.

இவ்விழாவில் திரு. கனக சுந்தரம்பிள்ளை எழுதிய 'நாவலர்சரித்திரம்' என்னும் நூல் நூற்றாண்டு விழாச் சபையின் சார்பில் வெளியிட்டுவைக்கப்படவிருக்கிறது.

நேற்று நடைபெற்றவிழாச்சபை நிர்வாகக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்திற்கு வித்துவான் ந. சுப்பையாபிள்ளை தலைமை வகித்தார்.

## சி. ஐ. டி. என்று சொல்லி சோதனையிட்டாராம்

வல்வெட்டித்துறை, வெள்ளி
கம்பளையைச் சேர்ந்த கதிரேசு என்ற இளைஞர்தான் ஒரு இரகசிய பொலிஸ் உத்தியோகஸ்தரெனச் சொல்லி கடந்தவருடம் மார்கழிமாதம் 9-ம் திகதி பருத்தித்துறையிலுள்ள ஒரு விற்பனவு நிலையத்தைச் சோதனையிட்டதாக பொலிசாரால் குற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. சின்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொழும்பு சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் திரு. கே.குமார் திரு. கணேசமூர்த்தி. எஸ். சிவஞானசுந்தரம், வி. மரியதாஸ், கா. முருகேசு ஆகியோர் சாட்சியமளித்தபின் மாஜிஸ்திரேட் எதிரி கதிரேசுவை அங்கொடை மனநோயாளர் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டு மீண்டும் இம்மாதம் 31-ம் திகதிக்கு கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

## நால்வருக்குப் போட்டியில்லை ஒருபெண்ணும்போட்டியிடுகிறார்

### புங்குடுதீவு கி. ச. தேர்தல்

யாழ்ப்பாணம், சனி
புங்குடுதீவு கிராமசபைத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் நேற்று தமது அபேட்சா பத்திரங்களைத் தாக்கல் செய்தனர். 12 வட்டாரங்களைக் கொண்ட இக்கிராமசபைத் தேர்தலில் நான்கு வட்டாரங்களில் போட்டியின்றித் தெரிவு நடைபெறவிருக்கிறது. 2-ம் வட்டாரத்தில் ஒரு பெண்ணும் போட்டியிடுகிறார்.

போட்டியிடும்அபேட்சகர்கள் விபரம் வருமாறு:-

1-ம் வட்டாரம்: பி. கே. முத்துலிங்கம், மி. செல்லானந்தம், சி. அம்பிகைபாகன்.

2-ம் வட்டாரம்: திருமதி சுப்பிரமணியம் யோகம்மா, ச. ராஜேந்திரம், ச. கார்த்திகேசு.

3-ம் வட்டாரம்; அ. கந்தையா, எஸ். திருநாவுக்கரசு, எஸ். கந்தப்பிள்ளை, கே. சோமசுந்தரம், ரி. நாகேஷ்.

4-ம் வட்டாரம்: பி. கார்த்திகேசு [போட்டியில்லை].

5-ம் வட்டாரம்: த. விசுவலிங்கம் [போட்டியில்லை]

6-ம் வட்டாரம்; எஸ். தர்மலிங்கம் [போட்டியில்லை

7-ம் வட்டாரம்:-த. பாலசுப்பிரமணியம், செ. சோமசுந்தரம், த. நடராசா, க. வீரசிங்கம், பெ. ஆறுமுகம், ஆ. அருணாசலம்.

8-ம் வட்டாரம்:- வி.ராஜரத்தினம், நா. உலகநாதன், க. நடராசா, பெ. நமசிவாயம்.

9-ம் வட்டாரம்:- நா. நல்லதம்பி, செ. நடராசா, கே. குமாரசாமி.

10-ம் வட்டாரம்:- க. வைத்தியநாதன், சு. நல்லதம்பி, பி. நல்லதம்பி.

11-ம் வட்டாரம்:- கே. மதியாபரணம் (போட்டியில்லை)

12-ம் வட்டாரம்;- சு. இலட்சுமணன், பி. அப்பத்து, க. கனகசபை, கே. குமாரசாமி, த. மாதுங்கர், ம. கந்தையா.

## காட்டில் கட்டியவர்கள் யார்?

உடுப்பிட்டி, வெள்ளி
திருட்டுப்போன 5எருமை மாடுகளில் நான்கு நடுக்காட்டில் பரிதாபமாக இறந்து கிடந்தன. ஒன்று உயிருடன் தப்பி வந்தது. இச்சம்பவம் கொக்குத்தொடுவாய் என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது.

எருமைமாடுகளைத் திருடிச் செல்லும் இனந்தெரியாத திருடர் கோஷ்டியொன்று ஐந்து எருமை மாடுகளைக் கடத்திச் சென்று நடுக்காட்டில் மரமொன்றில் கட்டிவைத்திருந்ததாகவும் அவற்றில் நான்கு எருமைகள் ஆகாரமில்லாமல் பட்டினியால் மாண்டதாகவும் ஒரு எருமை தப்பி வந்து சேர்ந்துள்ளதாகவும் இறந்த மாடுகளின் சடலங்கள் கொக்குதொடுவாயிலிருந்து 17 மைல் தொலைவிலுள்ள நடுக்காட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.


### தேவை

விநியோகஸ்தர்கள்
கடந்த கால் நூற்றாண்டுகளாக நடத்திவரும் பேக்கரிக்கு ரூபா 500 பிணைப்பணம் கட்டக் கூடிய விநியோகஸ்தர்கள் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். மலர்விழி அச்சாலயம், பாசையூர், யாழ்ப்பாணம். 1782


## இருவட்டாரங்களில் போட்டியில்லை

### துணுக்காய் கி. ச. தேர்தல்

யாழ்ப்பாணம், சனி
துணுக்காய் கிராமசபைத் தேர்தலுக்கான அபேட்சக நியமனப்பத்திரங்கள் நேற்று முன்தினம் தேர்தல்கந்தோரைச் சேர்ந்த திரு. எஸ்.வேலாயுதம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டது 6 வட்டாரங்களுக்குமான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப் பட்ட போது 3ம் வட்டாரத்துக்கு திரு.வி. கந்தசாமியும், 5ம் வட்டாரத்துக்கு திரு. எஸ். கனகலிங்கமும் போட்டியின்றித் தெரியப் பட்டார்கள்.

ஏனைய வட்டாரங்களில் போட்டியிடும் அபேட்சகர்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:-

1ம் வட்டாரம்:-கே. சுப்பையா, வி. சிற்றம்பலம், ஏ. குலசேகரம். 2ம் வட்டாரம் ஏ. நடராசா, ரி. கந்தசாமி, 4ம் வட்டாரம் எம். எஸ். தம்பையா, என். ஆழ்வாப்பிள்ளை. 6ம் வட்டாரம்:- வி சின்னத்துரை. எஸ். முகேசு, என். துரைசிங்கம். (கா.நி)

## இவர்கள் மீது நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி
எதிர்க்கட்சி பார்லிமெண்டரிக் குழுக்கூட்டத்தில் 'சிங்களம்மட்டும்' முடியான் சேதென்னக்கோன், ஆர். ஜி. சேனநாயகா, சோவிர சந்திரசிறி ஆகியோர் மீது நடவடிக்கை மேற்கொள்வதென இன்று தீர்மானிக்கப் பட்டது. இன்றைய கூட்டத்தில் திருமதி ஸ்ரீமாவோ கலந்துகொள்ளவில்லை.

## பத்திரா...

[1-ம்பக்கத் தொடர்ச்சி]
பொலிஸ்காரர், எதிரி ஆகியோரின் முறைப்பாடுகளையும் பதிவுசெய்தேன். எதிரியின் முறைப்பாட்டை ஜீப் வண்டிக்குள் வைத்து பதிவு செய்தேன். எதிரியை பொலிசார் தாங்கிக்கொண்டுவந்து ஜீப் வண்டிக்குள் சாய்ந்துகொண்டிருக்க விட்டிருந்தார்கள். எதிரிக்கு துப்பாக்கிக்குண்டு பட்டு தலையிலும் கழுத்திலும் வயிற்றிலும் கையிலும் காயங்கள் இருந்தன. அவரது உத்தியோக உடுப்பில் இரத்தம் தோய்ந்திருந்தது. அச்சமயம் அவர் பலவீனமாக இருக்கக் காணப்பட்டிருந்தார். நான் இறந்தவரின் சடலத்தையும் வானையும் வல்வெட்டித்துறை — உடுப்பிட்டி ரோட்டில் கண்டேன். வான் சநதிப்பக்கத்தை நோக்கி நின்றது. வானின் உட்பக்கத்தை நான் பார்க்கவில்லை துப்பாக்கிகளை சோதனை யிட்டு சரியெனக்கண்டேன். ஒன்பது வெற்றுத்தோட்டாக்களையும் நான்கு விளம்பரப் பலகைகளையும் பாரம் எடுத்தேன்.

இறந்தவரின் சகோதரரான இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கமும் சாட்சியமளித்தார்.

## 15 கலன் வடிசாராயம்

உடுவில், வெள்ளி
சுன்னாகம் பொலிஸ் கோஷ்டியினர் உரும்பராயிலுள்ள ஒரு வீட்டிலிருந்து 15 கலன் கள்ள வடிசாராயத்தை நேற்றுக் கைப்பற்றினர்.

சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜேக்கப் தலைமையில் உரும்பராய்க்குச் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் அங்குள்ள ஒரு வீட்டைச் சந்தேகத்தின் பேரில் சோதனை நடத்தியபோது அங்கு 15 கலன் வடிசாராயம் [illegible] காணப்பட்டதாம்.

## எமில் அப்பீல் செய்வார்

லண்டன், மார்ச். 8
மோசடிக்குற்றச்சாட்டின் மீது எட்டு வருட சிறைத் தண்டனையும் 50,000பவுன் அபராதமும் விதிக்கப்பட்டுள்ள இலங்கையரான டாக்டர் எமில் சௌந்தரநாயகம் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்யவிருக்கிறார்.

கரவெட்டி

## தபால்நிலையத்தை பார்வையிட்டார்

உடுப்பிட்டி, வெள்ளி
உடுப்பிட்டித் தொகுதிக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்த உதவித்தபால் தந்தி அமைச்சர் திரு. ரீ. விஜயபால மெண்டிஸ் நேற்று கரவெட்டி தபாற் கந்தோரைப் பார்வையிட்டார். கரவெட்டித் தபால் நிலைய அதிபர் திரு. சந்தியாப்பிள்ளை உதவி அமைச்சரை வரவேற்றார். அமைச்சருடன் தந்தி, தொலைபேசி திணைக்கள அத்தியட்சகர் திரு. நாகலிங்கம், பிரதம தபால், தந்தி என்ஜினியர் திரு. அழகரத்தினம் உட்பட வேறு சில அதிகாரிகளும் வந்திருந்தனர்.

கரவெட்டித் தபால் நிலையத்தில் தபால்நிலைய ஊழியர்களால் அளிக்கப்பட்ட விருந்துபசாரத்திலும் அமைச்சர் கலந்து கொண்டனர்.

## ராணி......

(1-ம் பக்க தொடர்ச்சி)
திருமதி லீலாவதியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

ராணிஎன்றழைக்கப்பட்ட விமலாவதி என்னும் 12 வயதுச்சிறுமி அடி காயங்களுடனும் சூட்டுக் காயங்களுடனும் நீர்கொழும்பில் ஒரு வீதியில் சாக்கில் கட்டப்பட்டுக் கிடந்ததும் பொலிஸாருக்கு இதுபற்றித்தகவல் கிடைத்ததும் அவர்கள் அந்தச் சாக்கை அவிழ்த்து ராணியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதும் பேச முடியாத நிலையிலிருந்த ராணி 'புளியமரத்தடிவீடு' என்று ஒரு வார்த்தை மட்டும் சொல்லிவிட்டு உயிர் நீத்ததும் வாசக நேயர்களுக்கு நினைவிருக்கும். இதன் பின் பொலிசார் தீவிர புலன் விசாரணை செய்து ராணி வேலைசெய்து வந்த வீட்டின் எஜமானியான திருமதி லீலாவதி அமரசிங்கா என்பவரைக் கைது செய்து அவர்மீது கொலைக் குற்றம் சுமத்தி வழக்குத் தாக்கல் செய்திருந்தனர், இந்தவழக்கு நீர்கொழும்பு நீதவான் முன் விசாரணை செய்யப்பட்டபின் எதிரியை சுப்ரீம் கோட்டில் விசாரணைக்கு நிற்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

## தம்பிரானுக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி
இந்தியா சென்று இலங்கை திரும்பியநல்லைஞான சம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளுக்கு பலாலி விமானநிலையத்தில் வைத்து வரவேற்பு அளிக்கப்பட்டது

சங்கீத கதாகலாக்ஷேப மணிதிரு. பொன்னம்பலமும் நல்லை ஆதீனத் தொண்டர்களும் கோப்பாய் திருவருள்தவநெறி மன்றத்தொண்டர்களும் விமானநிலையத்தில் வைத்து தம்பிரான்சுவாமிகளுக்கு மாலையிட்டு வரவேற்புக் கொடுத்தனர்.

நேற்றுமுன்தினம் ஆதீனத்தில் நடைபெற்ற வரவேற்புபசாரத்தில் முதலியார் திரு.ஸி முத்துத்தம்பி, ஆர். பி.ஹரன் வழக்கறிஞர்திரு. கே.வி. எல் சண்முகநாதன் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். [கா.நி]

## பண் இசை வகுப்பு

யாழ்ப்பாணம், சனி
அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் ஆதரவில் இம்மாதம் 14ந்திகதி கந்தர்மடம் வேதாந்த மடமண்டபத்தில் மாணவர்களுக்கான பண் இசை வகுப்பு நடைபெற விருக்கிறது. இதனை வழக்கறிஞர் திரு. எஸ். நாகராஜா ஆரம்பித்து வைப்பார். (கா.நி.)

## தீவிர நடவடிக்கை

சங்கானை வெள்ளி
சங்கானை பட்டினசபை எல்லைக்குள் சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளில் குடியிருப்போர் சிலர் வாடகைப் பணம் கட்டத் தவறியதைத் தொடர்ந்து பட்டினசபை இறைவரி வேலை மேற்பார்வையாளர் திரு. ச. குலசூரியன் எடுத்த நடவடிக்கையின்பேரில் வரி கட்டத் தவறியோரின் பாவனைப் பொருட்கள் சுவீகரிக்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டன. இதனால் வாடகைப் பணம் கட்டவேண்டியவர்களும் சோலை வரி கட்ட வேண்டியவர்களும் உரிய காலத்தில் பணத்தைச் செலுத்த முனைந்துள்ளனராம்

## பதவி உயர்வு

குரும்பசிட்டி, வெள்ளி
தற்போது தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் டாக்டர் சற்குரு பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாண மாவட்ட உதவி சுகாதார அத்தியட்சகராக நியமனம் பெற்றுள்ளார். இதனை முன்னிட்டு திரு. சற்குருவுக்கு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக ஊழியர்கள் பிரியாவிடை உபசாரம் நடாத்தினர்.

## மன்னார் மாவட்டத்தில் சைவ ஆசிரியர் சங்கம்

மன்னார், வெள்ளி
மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றும் சைவ ஆசிரியர்களிடையே ஒத்துழைப்பை வளர்க்கவும் சைவசமயக் கல்விக்குப் பொதுவான பாடத்திட்டம் வகுக்கவும், மற்றும் சைவ வாழ்க்கைக்கு வழி காட்டவும் சைவ ஆசிரியர்கள் கழகம் ஒன்று அமைப்பதற்கான அமைப்புக்கூட்டம் திருக்கேதீஸ்வர தேவஸ்தானத்தில் கௌரி அம்பாள் வித்தியாலய தலைமை ஆசிரியர் திரு. ந. சிவசாமி தலைமையில் நடைபெற்றது. மேற்படி சபைக்கான அமைப்பு விதிகளை வகுப்பதற்கு அடம்பன் மகா வித்தியாலய அதிபர் இராஜசண்முகரத்தினம் தலைமையில் மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது.

இச்சபையின் பொதுக் கூட்டத்தில் பின்வரும் உறுப்பினர்கள் கொண்ட அமைப்புக்குழு தெரியப் பட்டது.

திரு. ந. சிவசாமி [தலைவர்], திரு. இராஜசண்முகரத்தினம், திரு. ஏ. தாமோதரம்பிள்ளை, திரு. பொ. விஷ்ணு, திரு. அ. வை. முத்துச்சாமி [செயலாளர்].

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச்மாதம்9-ம்திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org